# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, பெப்ரவரி 01, 2019. இதழ் - 49











பேஸ்புக் காதலில் சீரழியும் இளம் பெண்கள்
பக்கம் - 10

அரசியல் கட்சிகள் தமக்குள் 'இணக்கம்' காணவேண்டும்
நல்லிணக்கம் என்பதுவே இன்று எமது முக்கிய தேவை என்று...
பக்கம் - 04


கல்லடிப்பாலமும் முகநூலும் : முதலில் இந்த எண்ணத்தை ஒழிக்க வேண்டும்
பக்கம் - 03


நெஞ்சு பொறுக்குதில்லையே!
ஆளாளுக்கு ஒரு நிகழ்வு -- பாதிக்கப்பட்டவர் நிலையில் மாற்றம் இல்லை
பக்கம் - 06

## ஒன்பது மாகாணசபைகளுக்குமான தேர்தல் ஒரேநாளில்-- பிரதமர் கட்சித் தலைவர்களைச் சந்திக்கிறார்

--- அமிர்தசன் ---

ஒன்பது மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை நடத்த இணக்கம் ஏற்பட்டுள்ள நிலையில் பிரதமர் ரணில் விக்கரமசிங்க, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் அடுத்த வாரம் சந்திக்கவுள்ளார்.

ஒன்பது மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒரேநாளில் நடத்துவதற்கான இணக்கத்தைப் பெறும் நோக்கில் அனைத்து கட்சிகளின் தலைவர்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்திக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர், அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பழைய தேர்தல் முறைப்படி மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது குறித்தும் கட்சித் தலைவர்கள் சந்திப்பில் கலந்துரையாடப்படும் எனவும் அவர் வியாழக்கிழமை கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, முதலில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு மகிந்த ராஜபக்ச தரப்பும் இணக்கம் தெரிவித்துள்ளது. எனினும் பழைய தேர்தல் முறைப்படி தேர்தல்களை நடத்துதானால் அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் சிறப்புப் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என மகிந்த தரப்பு உறுப்பினர்கள் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## காட்டு யானைகளின் வரவேற்புடன் (அட்டகாசத்துடன்) ஆரம்பித்த 40வதுவட்டை பாடசாலையின் விளையாட்டுப் போட்டி.





காட்டு யானைகளின் அட்டகாசத்துடன் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட நாற்பதுவட்டை விபுலானந்த வித்தியாலயத்தின் இல்லமெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி கடந்த (30) புதன்கிழமை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இல்ல விளையாட்டுப்போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னதாக, காட்டு யானைகள் விளையாட்டு மைதானத்தில் நின்றுகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. குறித்த பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதுடன், பாடசாலையின் சுற்றுவேலிகளை உடைக்கின்றமை, பயிர்களுக்கு சேதம் விளைவிக்கின்றமை, மனிதர்களை தாக்குகின்றமை போன்ற செயற்பாடுகளிலும் காட்டு யானைகள் ஈடுபட்டு வருகின்றன. அண்மையில் பாடசாலையின் முன்னால் உள்ள வீடொன்றில் நின்றுகொண்டிருந்த பிள்ளையை பாடசாலை நேரத்தில் காட்டு யானை தாக்கிய சம்பவமும் இடம் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.
காட்டு யானைகளின் தொல்லைகளையும் எதிர்கொண்டு இங்குள்ள மாணவர்கள் கற்றலை தொடரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை உள்ளது.

வித்தியாலயத்தின் அதிபர் செ.பரா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ஒலிம்பிக்தீபம் ஏற்றல், சத்தியப்பிரமாணம், அணிநடை மரியாதை, அஞ்சல், குறுந்தூர

தொடர்ச்சி... (பக்கம் -15 )




## சேனா படைப் புழுவைக் கட்டுப்படுத்த அமெரிக்காவிலிருந்து வைரஸ்

படைப்புழுவைக் கட்டுப்படுத்துவதற்கு அமெரிக்காவிலிருந்து வைரஸ் நுண்ணுயிர் தருவிக்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த வைரஸைப் பயன்படுத்தும் பரீட்சார்த்த முயற்சி வெற்றி பெறும் பட்சத்தில், அதனை படைப்புழுவைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப் போவதாக தாவரவியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பிரதான குடம்பி விஞ்ஞானி எஸ்.எஸ்.வெலிகமகே தெரிவித்தார்.

## பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் தலைவராக பேராசிரியர் ஜெயசிங்கம் நியமனம்



கிழக்கு மாகாணப் பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் தலைவராக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் த. ஜெயசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் வழங்கியுள்ளார்.

இதுவரை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக திகழ்ந்த ஜெயசிங்கம் அவர்கள் மட்டக்களப்பு செங்கலடியை சேர்ந்தவராவார்.

இவர் ஒரு தாவரவியல் சிரேஸ்ட விரிவுரையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வாகன விபத்தில் மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் பலி




மட்டக்களப்பு - ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரதேசத்தில் புதன்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளுடன் தனியார் பிரயாணிகள் பஸ்வண்டி மோதி விபத்து இடம்பெற்றுள்ளது. பஸ் வண்டியின் சாரதி ஏறாவூர்ப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

மட்டக்களப்பு - செங்கலடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 50 வயதுடைய கந்தக்குட்டி கோமளேஸ்வரன் என்பவரே உயிரிழந்துள்ளதாக அடையாளங்காணப்பட்டுள்ளது. க்கரைப்பற்றிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் வண்டி முச்சக்கர வண்டியொன்றை முந்திச்சென்றபோது எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுயுள்ளது. இச்சம்பவம் இடம்பெற்றமை அருகிலிருந்த வர்த்தக நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கெமராவில் காலை 7.15 மணிக்கு பதிவாகியுள்ளதாக ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர். ரணமடைந்தவரது உடற்பாகங்கள் சிதறியுள்ளன. சடலம் உடல்கூறு பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர்ப் பொலிஸார் இச்சம்பவம் குறித்த விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## புலம்பெயர் உறவுகளின் முயற்சியால் 130 பேருக்கு இலவச கண் சத்திர சிகிச்சை



லண்டன் வாழ் மட்டக்களப்பு வைத்தியசாலை நண்பர்கள் அமைப்பினால், வறிய குடும்பங்களைச் சேர்ந்த 130 பேருக்கு இலவச கண் சத்திர சிகிச்சைகள் ஜனவரி 25 இல் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நடத்தப்பட்டன.

கண் பார்வை தொடர்பாக பல்வேறு குறைபாடுகளுடன் அதற்கான சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளவதற்கான போதுமான நிதி வசதிகளின்றி இருந்த 130 பேருக்கு லண்டன் வாழ் மட்டக்களப்பு வைத்தியசாலை நண்பர்களின் அமைப்பின் ஊடாக இவ் இலவச சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

துறை சார்ந்த புலம்பெயர் தமிழ் வைத்திய நிபுணர்களும், மட்/ போதனா வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர்களும் இணைந்து மேற்படி சத்திர சிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கனிம மண் அகழ்வுக்கு எதிர்ப்பு




(ருத்ரா)

மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் கனிம மண் அகழ்வுத் தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தினை நிறுத்துமாறு வலியுறுத்தி கடந்த புதன்கிழமை காலை(30) பிரதேச மக்கள் வாகரை பிரதேச செயலகத்திற்கு முன்பாக வீதியில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். கதிரவெளி பிரதேச பொதுமக்கள் மற்றும் சமூக அமைப்புக்களால் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களான பால்சேனை வடக்கு தொடக்கம் வெருகல் வரையான கதிரவெளி, புதூர், புச்சாக்கேணி ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதாக கனிமங்கள் நிறைந்த மணல் அகழ்வு மற்றும் தொழிற்சாலை அமைக்கும் ஆரம்ப வேலைகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக தமக்கு எந்த விதமான தெளிவூட்டல்களும் இல்லையென்றும். இவ் தொழிற்சாலை அமைப்பதனால் சூழல்பாதிப்பு, பௌதீக சூழலான நீர்ச் சூழல், நிலச் சூழல், வளிச் சூழல், பாதிப்படைவதாகவும், கடல் வளம் பாதிப்படையும் என்றும் நிலத்தடி நீர் பாதிப்பிற்குள்ளாகி எமது எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கை பாதிப்படையும் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

விளம்பரம்

வளவு விற்பனைக்கு

செங்கலடி போதகர் வீதி, பழைய ஊர் சந்தியில், வலது பக்கத்தில் வீட்டுடன் உள்ள 34 பேர்ச்சஸ் வளவு விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு : 0767793747

க. சிறீபஞ்சாட்சரம்
இல. 18, புனித மைக்கல் வீதி,
மட்டக்களப்பு

## காட்டு மரங்கள் கைப்பற்றப்பட்டன



கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் எல்லைக் கிராமமான வடமுனை மீராண்டவில் காட்டுப் பகுதியில் விற்பனைக்காக களஞ்சியப்படுத்தி மறைத்து வைக்கப்பட்ட, பெறுமதி வாய்ந்த, 74 காட்டு மரத் துண்டுகளை தாம் கைப்பற்றியுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன தெரிவித்தார்.

புதன்கிழமை அதிகாலை (30) தமக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே தமது தலைமையிலான பொலிஸ் அதிகாரிகள் குறித்த இடத்திற்கு சென்று அவற்றினை கைப்பற்றியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் பெறுமதி சுமார் 20 லட்சமாகும் என்றார் அவர். முதிரை, பாலை,தேக்கு போன்ற பெறுமதியான மரத் துண்டுகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை தாம் முன்னெடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ருத்ரா)

## மீனின் விலையை மீனவர்களே தீர்மானிக்க வேண்டும் - மட்டு - மாவட்ட அரசாங்க அதிபர்.



மீனின் விலையை மீனவர்களே தீர்மானிப்பவர்களாக இருக்க வேண்டும். இடைத்தரகர்கள் இருக்கக்கூடாது. அதற்கான செயற்பாடுகளை மீனவர் கூட்டுறவுச் சம்மேளனம் மேற்கொள்ள வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் தொடர்பான விசேட கூட்டம் ஒன்று மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான மாணிக்கம் உதயகுமார் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மீனவர்களது பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடும் போதே அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

காலங்காலமாக பயன்பட்டு வந்த முறைகளிலிருந்து இரசாயனங்களைப் பயன்படுத்துவனாலேயே வாவிகளில் மீன்களின் குறைவு ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## வியாழேந்திரன் - கிழக்கு ஆளுநர் சந்திப்பு



மட்டக்களப்பு மாவட்ட தமிழ் பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் அவர்கள்

# ‘‘இணக்கம்‘‘ முதலில் எமக்குள் தேவை!

## அரசியல் கட்சிகள் தமக்குள் ‘இணக்கம்‘ காணவேண்டும்



நல்லிணக்கம் என்பதுவே இன்று எமது முக்கிய தேவை என்று பல தரப்பினராலும் இன்று வலியுறுத்தப்பட்டு வருகின்றது. போர் கடந்து, பேரழிவை ஏற்படுத்திப் போன ஒரு மண்ணில் அது முக்கியம் என்பதை எவரும் மறுக்கவும் முடியாது.

ஆனால், போரில் தோற்றவர்கள் அல்லது வீழ்ந்தவர்கள் அல்லாமல் போரில் வென்ற அல்லது அப்படி நினைக்கின்ற தரப்பே அதற்கான குரலை முதலில் ஒலிக்க வேண்டும், அதுவே இணக்கத்துக்கு வழி செய்யும் என்று ஒரு வாதமும் இங்கு முன்வைக்கப்படுகின்றது. அதிலும் உண்மை உண்டு.



இங்குள்ள யதார்த்த நிலையில் போரில் வென்ற தரப்பிடம் இருந்து உண்மையான நல்லிணக்கத்துக்கான அழைப்பு வரவில்லை என்பதையும் இங்கு நாம் கூறித்தான் ஆகவேண்டும். ஆழ்ந்த கரிசனையுடன் அதற்கான அழைப்பு எதுவும் வரவில்லை. இதுவே இலங்கையின் எதிர்காலத்தின் தோல்விக்கான முக்கிய சமிக்ஞையும்கூட.

உண்மையில் இங்கு நான் பேச முன்படுவது அதற்காகக்கூட அல்ல. தோற்று வீழ்ந்தவர்களைப் பொறுத்தவரை, தாம் எழுந்து நிற்பதற்காகக்கூட அவர்கள் மத்தியிலும் ஆழமான நல்லிணக்கம் இங்கு தேவைப்படுகின்றது. தோற்று வீழ்ந்த நாம் எமக்குள் இணக்கம் இல்லாமல் தொடர்ந்தால் எமது நிலைமை மேலும் பேரழிவாகிவிடும்.

போரில் வென்ற தரப்பு நல்லிணக்கத்தை பற்றி சிந்திக்காமல், வெற்றி பெற்ற மிதப்பில் இதே பாணியை தொடரலாம், சிறுபான்மையை தொடர்ந்து ஆக்கிரமிக்கலாம் என்று நினைக்கலாம். ஆனால், இலங்கை என்று ஒட்டுமொத்த நாடு என்ற அடிப்படையில் இந்த நிலைமை தொடர்ந்தால், இங்கு பெரும் வீழ்ச்சியே எதிர்காலத்தில் நடக்கப்போகின்றது என்பது பல ஆழமான ஆய்வாளர்களின் கருத்து.

அதேவேளை சிறுபான்மையினங்களைப் பொறுத்தவரை, குறிப்பாக போரில் தோற்ற தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களுக்குள்ளேயே அவர்கள் இணக்கம் இல்லாமல் இருப்பது மிக மோசமான விளைவுகளை எதிர்காலத்தில் ஏற்படுத்திவிடும்.

இங்கிருக்கும் தமிழ் கட்சிகளிடையே உண்மையான இணக்கப்பாடு எதுவும் கிடையாது. சில தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தமக்கிடையே பேசிக்கொள்வதில்லை என்ற அளவுக்கு அந்த நிலமை இருப்பதாக ஒரு மூத்த ஊடகவியலாளர் அண்மையில் கவலைப்பட்டார்.

அதுமாத்திரமன்றி, இப்படியான கட்சிகளின் போட்டிச் செயற்பாடுகள் பல நேரங்களில் தமிழர்களின் பொதுப் பிரச்சினையில் பாதகத்தை ஏற்படுத்தி விடுவதாகவும் பல முறைப்பாடுகள் வருகின்றன.

அண்மையில், கொக்கட்டிச்சோலை படுகொலையின் ஆண்டு நிறைவு நிகழ்வு நடந்தது. எமது செய்தியாளர்களின் தகவல்களின்படி, ஆரம்பத்தில் ஒவ்வொரு வருடமும் பாதிக்கப்பட்ட மக்கள் சேர்ந்தே இந்த நிகழ்வைச் செய்து வந்துள்ளனர். பின்னர், போர்ச் செயற்பாடுகளால் அவை தடைப்பட, பின்னர் தமிழரசுக்கட்சியினர் அதனை நடத்தி வந்துள்ளனர். இந்தத்தடவை, படுவான் பாலகனின் தகவல்களின்படி அந்த நிகழ்வு இரு நிகழ்வுகளாக நடந்துள்ளது.

**சீவகன் பூபாலரட்ணம்**

வழமைபோல தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேச நிர்வாகம் அதனை மாலையில் நடத்த, காலையில் தமிழ் மக்கள் தேசிய முன்னணியினரால் இன்னுமொரு நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது. இரண்டு நிகழ்வுகளிலும் கலந்து கொண்ட பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானோரின் குடும்பங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு.

கடந்து போன 31 வருடங்களில் இந்த பாதிக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு கிடைத்தை நஸ்டாடு என்பது மிகமிகக் குறைவு. ஆனால், இவர்கள் இப்போது கிட்டத்தட்ட இரண்டாக்கப்பட்டுவிட்டார்கள். இரண்டு கட்சிகளும் தனித்தனியாக நிகழ்வுகளை நடத்தியதற்கு பல காரணங்களை சொல்லலாம். ஆனால், ஒரு விடயம் மாத்திரம் உண்மை. இங்கு கட்சிகளுக்கு இடையிலான இணக்கமின்மை காரணமாக தமது இழப்புகளுக்காக போராட வேண்டிய மக்கள் கிட்டத்தட்ட இரண்டாக்கப்பட்டு விட்டார்கள்.

இனி இந்த மக்களுக்கு எதுவும் நடக்காதோ என்ற நிலைமைகூட ஓரளவு உருவாகிவிட்டது. 32 வருடமாக மறுமணம் செய்துகொள்ளாத பெண்கள் இனி செய்து கொள்ளப்போகிறார்களா? தந்தையை இழந்து, கடந்த 32 வருடங்களாக எந்த உதவிகளும் இல்லாது தவித்த, குறைந்தபட்சம் 32 வயதாகிவிட்ட பிள்ளைகளுக்கு இனி எது கிடைத்து, என்ன நடக்கப் போகிறது.



வெறுமனே நினைவு நிகழ்வுகளை மாத்திரம் நடத்தி, உணர்ச்சி வசமாக பேசிவிடுவதுடன் மாத்திரம் எதுவும் நடந்துவிடப்போவதில்லை. நாங்கள்தான் தொடர்ச்சியாக நினைவு நிகழ்வுகளை நடத்தினோம் என்று அந்தக் கட்சிகள் வேண்டுமானால், பெருமை பேசிக்கொள்ளலாம். நாங்கள் நினைவு நிகழ்வுகளுக்கோ, அல்லது மக்கள் போரில் உயிர் நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்கோ எதிரானவர்கள் அல்ல. ஆனால், அதனையும்விட வேறு பல தேவைகள் அந்தப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ச்சியாக இருந்து வருகிறது, அதனை கையாளுங்கள் என்பதுதான் எமது கோரிக்கை.

மாவீரர் தின அனுட்டானங்களின் போதும் நாம் கூறுவது அதைத்தான். இப்படிக் கூறுவதற்காக எம்மைத் “துரோகிகள்” என்று கூறித் திட்டுவதில் எந்தப் பயனும் கிடையாது. யார் எம்மை என்ன சொன்னாலும் நாம் மக்களுக்காக மாத்திரந்தான் பேச முடியும்.

சரி நாம் விடயத்துக்கு வருவோம். இந்த நிகழ்விலும் கட்சிகளின் மத்தியில் காணப்படும் இணக்கம் மக்களுக்கு பாதகமாக அமையும் நிலை ஏற்படுகின்றது.

இரு கட்சிகளை இங்கு உதாரணமாக காட்டினோமே ஒழிய, இந்த இரு கட்சிகளைத் தவிர ஏனையோர் உத்தமர்கள் என்று அர்த்தமில்லை. இங்கு அரசியல் கட்சிகள் மத்தியில் மாத்திரந்தான் இந்த நிலைமை என்றும் இல்லை. அவ்வளவு ஏன், செய்தியாளர் மத்தியிலும் செய்தி நிறுவனங்களின் மத்தியிலும்கூட இந்த இணக்கப்பாடில்லாத நிலைமை காணப்படுகின்றது.

இன்று இந்த நாகரிக உலகில் ஒரு பத்திரிகையின் ஆசிரியரோ அல்லது செய்தியாளரோ கலந்துகொள்ளும் நிகழ்வு குறித்த செய்தி இன்னுமொரு நிறுவனத்தின் ஊடகத்தில் வருவதில்லை. அதனை நிர்வாகங்கள் அனுமதிப்பதில்லை. மிகப்பெரும் நிறுவனங்களிலும் இந்த பக்குவமற்ற நிலைமை காணப்படுகின்றது. எல்லோரையும் கூறவில்லை. ஆனால், பரவலாக இந்த நிலை காணப்படுகின்றது.

இந்த இணக்கமின்மையை நாம் முதலில் எமக்குள் களைந்தாக வேண்டும். எமக்குள் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த இணக்கமின்மை குறித்து நிறையப் பேசியாக வேண்டும். துணிச்சல் உள்ளவர்கள் செய்ய முன்வாருங்கள். நீங்கள் இப்படி இருப்பதை முதலில் ஒப்புக்கொள்ளுங்கள். அதுவே நமக்கு நன்மை. அதன் பின்னர் மற்றவரைப் பற்றிப் பேசுவோம்.

# நெஞ்சு பொறுக்குதில்லையே!

## ஆளாளுக்கு ஒரு நிகழ்வு -- பாதிக்கப்பட்டவர் நிலையில் மாற்றம் இல்லை

**படுவான் திசையில்**

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

(32வருடங்களுக்குள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்யப்பட்டவை என்ன?)

'இன்றுதான் நடந்தது போல் உள்ளது. ஆனால் 32வருடங்கள் கடந்துவிட்டன', என மரகதமும், மாரிமுத்தும் மகிழடித்தீவு சந்தியில் நின்று பேசிக்கொண்டனர்.

1987ம் ஆண்டு தை 28ல் முனைக்காடு, முதலைக்குடா, மகிழடித்தீவு பகுதிகளில் ஒலித்த அவலக்குரலைப்பற்றிதான் இருவரும் பேசிக்கொண்டனர்.

முதலைக்குடா கிராமத்தினை அண்டிய ஆற்றோரத்தின் பகுதியில் "செரண்டிப் இறால் வளர்ப்பு பண்ணை" அமைந்திருந்தது. இன்றும் அந்த இறால் வளர்ப்பு பண்ணை சோகத்துடன் காட்சிகொடுக்கின்றது. 1987ம் ஆண்டு தை மாதம் வழமைபோன்று மக்களும் தமது அன்றாடகருமங்களை நிறைவேற்றுவதற்காக மன உற்சாகத்துடன் எழுந்தபோதுதான் இலங்கை இராணுவத்தினர் வருகைதருகின்றனர் என்ற சத்தமும் ஒலித்ததுடன், வெடிச்சத்தங்களும் கேட்டன. இச்சத்தங்கள் இம்மக்கள் மத்தியில் பயத்தினை உருவாக்கியது. ஆனபோதும் இறால்பண்ணையில் வேலை செய்தவர்கள், அங்கு வேலை செய்வதற்காக சென்றனர். சிலர் வெள்ளைக்காரனின் பண்ணைதானே அங்கு நின்றால் தமக்கு ஒன்றுமே செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் சென்றனர். ஆனால் அங்கு நடந்ததோ மிகவும் கொடூரமான செயல். இறால்பண்ணையில் வேலை செய்தவர்கள், அருகே உள்ள கிராமங்களின் வீடுகளில் இருந்த ஆண்கள் அனைவரும் அழைக்கப்பட்டனர். ஒவ்வொருவராக சுட்டுக்கொல்லப்பட்டனர். அவ்வாறு கொல்லப்பட்டவர்களின்



சடலங்களை உழவு இயந்திரத்தில் ஏற்றிச்சென்றனர். அச்சடலங்களை எங்கு புதைத்தார்கள் என்பதே இன்றுவரை தெரியாதுள்ளது. இதில் 85பேரளவில் கொல்லப்பட்டதாக கூறப்படுகின்றது.



ஒரே வீட்டில், ஒருவர், இருவர் எனவும் படுகொலை செய்யப்பட்டனர். இதனால் கொக்கட்டிச்சோலைப் பிரதேசமே கண்ணீர் மழையில் நனைந்தது. கொக்கட்டி மரத்தில் குருதிபாய்ந்த சுயம்புலிங்க புனித பூமியிலே, மனித இரத்தக்கறை

**படுவான் பாலகன்**

படிந்தது. இது நடந்து 32வருடங்கள் ஆகியும், இன்னமும் அந்நினைவினை மறக்கமுடியாதவர்களாக, இன்றுதான் நடந்ததுபோல் பேசிக்கொண்டிருக்கின்றனர், கணவனை, பிள்ளைகளை இழந்த மனைவி, சகோதரங்கள்.

கொக்கட்டிச்சோலை படுகொலை யென்றால் யாருக்குமே தெரியாமல் இருக்க முடியாது. இப்படுகொலை தொடர்பில் சர்வதேசம் வரை பேசப்பட்டது. ஆனால் நீதி இன்றுவரை நிலைநாட்டப்படவில்லை. படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக மகிழடித்தீவு சந்தியில் நினைவுத்தூபி அமைக்கப்பட்டுள்ளது. இத்தூபியும், 2007ல் நடைபெற்ற யுத்தத்தின் போது, உடைக்கப்பட்டது. பின்னர் புனர்நிர்மானம் செய்யப்பட்டு, நினைவு தினமும், தூபியின் அருகே நடைபெற்று வருகின்றது. இந்நினைவு தினம் வருடாந்தம் அனுஸ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்நினைவு தினத்தினை யுத்தத்திற்கு முன்னர் மக்கள் முன்னின்று நடாத்திவந்த நிலையில், யுத்தத்தின் பின்னரான கெடுபிடியான காலப்பகுதியிலிருந்து கடந்த 2018ம் ஆண்டு தை 27ம் திகதி வரை இலங்கைத்தமிழரசு கட்சியின் பட்டிப்பளைக்கிளையினர் நடாத்தி வந்தனர். ஆனால் இவ்வருடம் 2019ம் ஆண்டு, இரு நினைவுதின நிகழ்வுகள் மகிழடித்தீவு தூபியில் நடைபெற்றன. காலையில் தமிழ் மக்கள் தேசிய முன்னணியினரால் ஒழுங்குசெய்யப்பட்ட நினைவுதின நிகழ்வும், மாலைவேளையில் தமிழரசுக் கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்ட நினைவுதின நிகழ்வுகளும் நடைபெற்றிருந்தன. ஒரே இடத்தில், ஒரே நாளில், ஒரே விடயத்திற்காக இரு நினைவு தின அனுஸ்டிப்பு நடந்தமை சரியா? பிழையா? என்று வினா பலரின் மத்தியில் எழுந்துள்ளமையுடன், நினைவு தினத்தினை ஒன்றாக இணைந்து செய்திருக்கலாம் என்ற ஆதங்கமும் இருக்கின்றது.

நினைவுதினங்கள் அனுஸ்டிக்கப்படுவது, இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக மற்றையது இவ்வாறான வரலாறுகள் இளம் தலைமுறையினருக்கு கடத்தப்பட வேண்டும் என்ற சிந்தனையிலேயேயாகும். இது, இவ்வாறு இருக்க படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகள் தமது கணவன், சகோதரர்களை இழந்து இன்றுவரை மீண்டெழ முடியாதவர்களாக இருந்து கொண்டிருக்கின்றனர். சிறுவயதிலே கணவனை இழந்து இன்றுவரை மறுமணவாழ்வு இல்லாதவர்களாக சமுகத்தில் விதவைகளாகவே இருந்து கொண்டிருக்கின்றனர். பிள்ளைகளை இழந்தவர்கள் தமக்கான துணைகள் இன்றி குடும்பங்கள் வறுமை வாழ்க்கையுடனே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களின் வாழ்க்கைக்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட உதவிகள் என்ன? என்ற வினாவும் எழுந்திருக்கின்றது. மாரிமுத்து கூறுகின்ற போது, அவளின் கணவன் இருந்திருந்தால், அவள் இன்றுவரை துன்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. 'குடும்பத்தின் சுமையைக் குறைக்கவே, இறால் பண்ணைக்கு வேலைக்கு சென்றவர். ஆனால் இன்றைவரை உடலை காணவே இல்லை. இன்று குடும்பமே சுமையுடன்தான் இருந்து கொண்டிருக்கின்றது', என்ற வேதனையுடன் மாரிமுத்து பேசிக்கொண்டார்.

முப்பத்திரெண்டு வருடங்கள் என்பது, நீண்ட வருடந்தான், இன்றுவரைக்கும் நினைவு கூருதல் செய்யப்படுவதென்பதும் வரவேற்கதக்கதுதான். ஆனாலும் இக்குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்கு முறையான வழிவகைகளை மேற்கொள்ளாமை கவலையானதொன்றே. ஒவ்வொரு நினைவு தின நாட்களிலும் இரு குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்திற்கு உதவி செய்திருந்தாலும் கூட இன்று 64குடும்பங்கள் வாழ்வாதார ரீதியாக உயர்த்தப்பட்டிருப்பர்.

மறுமணவாழ்க்கையென்பது இப்பிரதேசத்தில் மிகக்குறைவாகவே காணப்படுகின்ற நிலையில், அவ்வாறான மறுமண வாழ்க்கை சமுகத்தில் சிறப்பாக பார்க்கப்பட்டிருந்தால்கூட இன்னும் சில குடும்பங்கள் வர்ழ்வாதார ரீதியாகவும், துணையென்ற ரீதியிலும் உயர்ந்திருக்கும். இங்கு மறுமணவாழ்விற்கான இடம் என்பது, மிகவும் குறைவென்பதினால் இறக்கும் வரை இங்குள்ள பெண்கள் விதவைகளாகவே இருந்துவிடுகின்றனர். இதனால், மறுமணத்தின் அவசியம் குறித்தும் பேசப்பட வேண்டியுள்ளது.

நினைவு தினங்களை மாத்திரம் அனுஸ்டித்துக்கொள்வதினால், மக்களுடைய துயர்களை துடைத்துவிட முடியாது. அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளையும் மேற்கொள்கின்ற போதே பாதிக்கப்பட்ட மக்கள் முன்னெழுந்து வருவதற்கு வழி வகுக்கும்.

# கல்லடிப்பாலமும் முகநூலும் : முதலில் இந்த எண்ணத்தை ஒழிக்க வேண்டும்



மணிசேகரன் பவித்திரன்

ஒருகாலத்தில், 24 மணிநேரமும் simplex எனப்படும் ஒருவழிப்பாதை முறையாக இருந்த முக்கிய புள்ளி தற்போது நவீன உத்திகளின் உதவியுடனான விஸ்தரிப்பின் மூலம் duplex எனப்படும் இரு வழிப்பாதையாக மாற்றப்பட்டதுடன், நம்பாரம்பரிய ஒருவழிப்பாதை வெறிச்சோடியது.

இதற்கு பின்னரான காலத்தில் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் மட்டக்களப்பு விஜயத்திற்கான அடையாளமாகக் காட்டமுறப்படும் புகைப்படங்களின் பின்னணியானது.

புதிய பாலத்தின் கட்டுமானப்பணிகளுடன் மக்களிடன் அதிக வரவேற்பும் முகநூலில் சிறு அளவிலான அறிமுகத்தையும் கொண்டிருந்தது. திறப்பு விழாவுடன் முகநூலில் பரவலான நெருக்கத்தை பெற்றிருந்ததை அறியலாம்.

பின்னர் கடந்த சிலவருடமாக இந்தப்புள்ளி மீண்டும் புத்துணர்வு பெற்றது. அதற்கு ஊக்கம் கொடுத்தவிடயமாக மட்டு இளைஞர்களின் பலவீனத்தைப் பார்க்கலாம்.

ஆம் தற்கொலைகள்,

முன்பெல்லாம் தற்கொலை செய்தால் எதிர்பாராத திடீர் செய்தியாக அது வந்தது. அதிலும் கல்லடிப்பாலத்தில் என்றால் கொஞ்சம் ஒருபடிமேலே இருந்தது.சற்று தற்கொலைகளின் எண்ணிக்கைகள் அதிகரிக்க குறிப்பாக பாலத்தில் நடக்கும் தற்கொலைகள் அதிகரித்த வண்ணமே இருந்தது. இவற்றிற்கு சமாந்தரமாக முகநூலிலும் தற்கொலைகள் வளர்ந்தன அதாவது முன்பெல்லாம் வெறும் செய்தியாக ஒரு போஸ்ட். பின் தற்கொலைகளின் அதிகரிப்புடன் போஸ்டுகளும் அதிகரித்தன விதமும் மாறியது.

பாலத்தில் தற்கொலை செய்வது சார்ந்த பல தகவல்களும் கட்டுரைகளும் பல ஊடகங்களில் முக்கியமாக முகநூலில் பகிரப்படுகின்றன பேசப்படுகின்றன. நீங்கள் தற்போது வாசித்துக்கொண்டிருக்கும் கட்டுரையும் இவ்வகைக்குள் அடங்கும். தற்கொலைகளை தடுக்க பலரும் பல வழிகளை பகிர்ந்தாலும் அவை ஒவ்வொன்றுக்கும் மறுப்பு தெரிவித்து பலரும் பல காரணங்களை தெரிவிக்கவே செய்கின்றனர். என்னதான் நாம் எல்லாரும் என்னத்த கதைச்சாலும் நடக்குறது நடக்கத்தான் போகுது. ஆனா யாராவது எதாவது செய்ய சொல்லல.. ஆனா ஒன்னும் செய்யாமல் இருக்காதிங்க எண்டுதான் சொல்றன் இவைகள் மட்டுமல்லாமல் நாம் சம்பவம் நடந்து சில நிமிடங்களில் பாலத்தில் இருந்து ஒரு நேரடி வீடியோவும் (Live) போடுகிறோம்.

எதிர்காலத்தில் நபர் பாலத்திலிருந்து பாய்வதை லைவ் போட மாட்டார்கள் என்பதும் மறுக்கமுடியாததே. இதற்கு அடுத்தகட்டமாக தற்கொலை செய்வதற்கு முன்பதாக போஸ்ட் போடும் நிலைமையும் ஏற்படக்கூடும்.

நம்மில் பலருக்கும் "பாலத்தில் தற்கொலையாம்" எனும் பதத்தை கேட்டு சலிக்கும் அளவிற்கு நிலைமை மாறிவிட்டது. உதாரணமாக இறுதியாக நடந்த தற்கொலையின் போது நண்பர் ஒருவருக்கு அவரின் தாயார் தொலைபேசியில் தொடர்பு கொண்டு "எங்க இருக்கா மகன்? "என்று கேட்க, "பாலத்தில யாரோ பாய்ந்ததாம், சரியான சனம் அங்கதான் நிக்கன்" எண்டு சொல்ல. உடனே தாய் "அதுதான் ஒரே நடக்குதே நீ பாயாம இருந்தா சரிதான்" என்று கதைக்குமளவிற்கு நிலைமை கவலைக்கிடமாகியுள்ளது.

தற்போது தற்கொலை செய்வதற்கு சிறந்த வழி எதுவெனப் பட்டியலிட்டால் பாலம்தான் முதலிடத்தில் இருக்கின்றது.




காரணம் இறப்பதற்காகவே பாண்டிருப்பிலிருந்து கிட்டதட்ட அரைமணி நேரத்திற்கு அதிகமாக பயணித்து வந்தும் பாய்ந்துள்ளாரே.. முதலில் இந்த எண்ணத்தை அழிக்க வேண்டும்.

## போதைப்பொருள் விழிப்புணர்வு ஒழிப்பு உரை





மட்டக்களப்பு நாவற்குடா தர்மரட்ணம் வித்தியாலயத்தில் அரசாங்க போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்ட, மாணவர்களுக்கான விழிப்புணர்வு உரையின் போது பிடிக்கப்பட்ட படம். ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் நாடெங்கும் இந்த வாரம் அனுட்டிக்கப்பட்டது.
அரங்கம் பத்திரிகையின் செய்தியாளர் டெரி றொஜர் லியோன் அவர்களும் நாவற்குடா பகுதிக்கான கிராமசேவகர் வ.லவக்குமார் அவர்களும் அங்கு உரையாற்றினார்கள்.





# பட்டறிவு

## பண்டைய சிங்கள சாதியத்தைப் பேணிய கோத்திர சபை (பஞ்சாயத்து) - 1



இலங்கையின் சமூக பண்பாட்டு அரசியல் அபிலாசைகளுக்கு ஏற்றாற் போல ஒரு ஆட்சி நிர்வாக முறை அமைக்கப்பட வேண்டும் என்கிற யோசனைகளும் அதற்கான முஸ்தீபுகளும் காலாகாலம் மேற்கொள்ளப்பட்டு வருவது தான். ஆனால் இன்று வரை இலங்கையில் வாழும் பல்லின – பன்மத மக்கள் பிரிவினரை சமத்துவமாக நடத்தக்கூடிய ஆட்சி அலகு எது என்பது பற்றி அந்நிய காலனித்துவத்தையும் தாண்டி, 30 ஆண்டுகால சுதேச யுத்தத்தையும் தாண்டியும் கூட கண்டுபிடிக்கப்படாமல் இழுபறியிலேயே இருக்கிறது. அந்த இழுபறியே இலங்கையின் மையப் பிரச்சினையாக தலைமுறை தலைமுறையாக நீடித்தும் வருகிறது. இந்தக் கட்டுரை ஆங்கிலேய காலனித்துவம் தமது நிர்வாக அலகை பிரயோகிப்பதற்கு முன்னர் நிலவிய "கோத்திர சபை" பற்றியது.

கோத்திர சபை என்பதை சிங்களத்தில் "வறிக சபா" (වරිගසභා / Variga Saba) என்று அழைத்தார்கள். வறிக சம்முதிய (Variga sammutiya = Variga convention) என்றும் சில இடங்களில் அழைக்கிறார்கள். ஒரு வகையில் அதை "குல சபை" என்றும் நாம் விளங்கிக் கொள்ளலாம். "சாதிய சபை" என்று மொழிபெயர்ப்பதை விட "கோத்திர சபை" என்பதும் மேலும் பொருத்தமாக இருக்கிறது.

அன்று நிலவிய பல்வேறு சமூகக் குலங்களுக்கான பஞ்சாயத்து முறையாகத்தான் அது இயங்கி வந்தது. சாதிகளுக்குள் இருக்கும் உபசாதி உட்பிரிவுகளையும் "வறிக" என்று தான் அழைத்தார்கள்.

1892 இல் வெஸ்லியன் மிஷனரியால் வெளியிடப்பட்ட இலங்கையின் மிகப் பழைய ஆங்கில - சிங்கள அகராதியில் "வறிக" (වරිග - Wariga) என்பதை caste, race, tribe, generation, descent, sort, species, [Colloq. ජාතිය jatiya] என்று விளக்குகின்றது. சிங்களத்தில் வர்க (Warga) என்பது பிரிவு என்றும் அர்த்தம் தரும். பிரிவுகளை வகைப்படுத்தும் "வர்க" என்கிற சொல்லிலிருந்தே வறிக என்கிற சொல் வந்திருக்கலாம் என்கிறது அந்த அகராதி. அந்தக் காலத்திலேயே 824 பக்கங்களில் வெளியான முக்கிய அகராதி அது.



இலங்கையின் உள்ளூராட்சி பற்றிய கற்கைகளில் ஏனோ "வறிக சபா" பற்றி விளக்கமளிக்க தவறியிருக்கிறார்கள் என்றேபடுகிறது.

இலங்கை மக்கள் மத்தியில் இன்று வரை சாதியத்தின் தாக்கம் தொடர்கிறது என்றால் இந்த கோத்திர முறை நீண்டகாலம் பேணப்பட்டு வந்திருப்பதை ஒரு காரணியாகக் கூற முடியும். அதுபோல இலங்கை மக்கள் மத்தியில் பரஸ்பரம் வேறுபடுத்தி பார்க்கும் வழக்கமும் - இறுதியில் இனத்துவ சிந்தனை தளைத்தோங்குவதற்கும் கூட இந்த கோத்திர சம்பிரதாயங்கள் வாழையடி வாழையாக பரம்பரைகளுக்கு கடத்தப்பட்டு வந்திருப்பதும் கூட ஒரு காரணமாக இருக்க முடியும். இனம், மதம், வர்க்கம், சாதி, உபசாதி, குலம், கோத்திரம், பிரதேசவாதம் அனைத்துமே மக்களை ஒருவரிடமிருந்து இருந்து ஒருவரை தூர விலத்தி வைத்திருக்கிறது என்பது கண்கூடு. இந்த கோத்திர சபை முறைகளின் நீட்சி சக மனிதரை "பிற" என்கிற மனநிலையில் பேணச்செய்திருக்கிறது.

இவர்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க அளவு தீண்டாமை இல்லாத போதும், இறுக்கமான அகமணமுறையும், புறமணத்தடையும் அந்த குழுமங்களின் இருப்பை அப்படியே காலாகாலமாக பேணச்செய்திருக்கிறது.

இலங்கையில் நிலவிய உள்ளூராட்சியின் வரலாறு நெடியது. இது கி.மு. 4 ஆம் நூற்றாண்டு வரை நீடிப்பதாகும். பண்டுகாபய மன்னரின் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் உள்ளூராட்சி முறை ஆரம்பமானதாக மகாவம்சம் உள்ளிட்ட வரலாற்று ஏடுகளில் இருந்து தெரிய வருகிறது.

அந்நாட்களில் ஒவ்வொரு கிராமத்திலும் கிராம ராஜ்ஜியம் எனப்படும் கிராமிய சபைகள் இருந்தன. மன்னரின் ஆட்சி நிர்வாகம் கிராம ராஜ்ஜியங்கள் வரை பன்முகப்படுத்தப்பட்டு இருந்ததுடன், கிராமிய நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் சிறிய அளவிலான நீதிமன்ற அதிகாரங்கள் கிராமிய சபைகளிடம் ஒப்படைக் கப்பட்டிருந்ததை வரலாற்று ஆவணங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

கிராம சபையைப் பொறுத்தவரை அது கி.மு ஐந்தாம் நூற்றாண்டிலிருந்தே ஆரியர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு அமைப்புமுறை என்றும் அதன் பின்னர் நாட்டில் பல்வேறு பிரதேசங்களிலும் அது நடைமுறையில் இருந்திருக்கிறது என்று இந்திக ஜயரத்ன விளக்குகிறார்.

1957 பண்டா- செல்வா ஒப்பந்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட "ரட்ட சபா" யோசனையைத் தான் நாம் அறிந்திருப்போம். அந்த பதத்தை அதிகாரப் பகிர்வு யோசனையுடன் இணைத்துப் பார்க்கிறபோதும் பண்டைய இலங்கையிலும் "ரட்ட சபா" என்கிற அதே பேரில் ஒரு அதிகார அலகு கண்டி ராஜ்ஜிய காலத்தில் இயங்கியிருக்கிறது. எனவே ரட்ட சபா எனும் போது பலருக்கும் எந்த "ரட்ட சபா" பற்றி குறிப்பிடுகிறோம் என்கிற குழப்பம் ஏற்படலாம். பண்டைய ரட்ட சபா முறைமையானது "கோத்திர சபை"யை போலவே இன்னும் பல வேறு அம்சங்களுடன் இயங்கியிருக்கிறது.

பலம்பொருந்திய ஒரு நிர்வாக அதிகார பீடமாக அது இருந்திருக்கிறது. இதுவும் சாதி அமைப்புமுறையை பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றியிருக்கிறது. பண்டைய "ரட்ட சபா" பற்றி எழுதுபவர்கள் கே.ஏ.குப்புருஹாமி எழுதிய ஆய்வுக் கட்டுரையை தவிர்ப்பதில்லை. ராஜரீக ஆசிய கழகம் - இலங்கைக் கிளையால் (Royal Asiatic society - CEYLON BRANCH) வெளியிடப்பட்ட சஞ்சிகையில் 1948ஆம் ஆண்டு அவர் "ரட்ட சபா" என்கிற தலைப்பில் எழுதிய ஆய்வுக் கட்டுரை முக்கிய ஒரு ஆவணம்.

அதில் அவர் ரட்ட சபா கொண்டிருந்த அதிகாரங்கள் பற்றி குறிப்பிடும்போது தண்டனைக்குரிய குற்றங்கள் பற்றிய ஒரு பட்டியலைத் தருகிறார்.

- ஒரு பெண் தாழ்த்தப்பட்ட ஆணுடன் அல்லது கரையோர சிங்களவருடன் ஓடிப்போனால்
- ஒரு ஆணோ பெண்ணோ வேறொரு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஆணுடனோ பெண்ணுடனோ வசித்தல்....
- ஒரு பெண் முறைகேடாக கருவுற்றாள்

**என்.சரவணன்**

- வேறொரு "வறிக"வைச் (கோத்திரத்தைச்) சேர்ந்த ஒருவரை மணமுடித்தால்
- ஒரு பெண் முறைகேடாக தாழ்த்தப்பட்ட சாதி ஆணுடன் தொடர்பை வைத்திருந்தாலோ
- தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவரின் வீட்டில் தாழ்த்தப்பட்டவரால் தயாரிக்கப்பட்ட உணவை உண்டாலோ, பாத்திரங்களைப் பயன்படுத்தினாலோ
- தாழ்த்தப்பட்டவர் பயன்படுத்திய செம்பில் தண்ணீர் குடித்தாலோ
- தாழ்த்தப்பட்ட ஒருவரால் தாக்கப்பட்டாலோ
- தாழ்த்தப்பட்ட ஒருவருக்கு சேவகம் செய்தாலோ...

அவை தண்டனைக்கு உரிய குற்றம் என்று அந்த பட்டியல் விரிகிறது. பெரும்பாலான விதிகள் அனைத்தும் அந்த கோத்திரத்தைச் சேர்ந்தவர்களின் "குலத்தூய்மையை" பேணிப் பாதுகாப்பதற்காக பிரயோகிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.

சிங்கள சமூகத்தில் நிலவிய சாதி அமைப்பில் தீண்டாமை என்பது சமூக சட்ட விதியாகவே நடைமுறையில் இருந்திருக்கிறது என்பது ஒரு அதிர்ச்சிதரும் செய்தி.

சாதிய கட்டமைப்பைப் பாதுகாப்பதற்காக இறுக்கமான "பஞ்சாயத்து" வடிவமாக ரட்ட சபா, வறிக சபா என்பவை பல்லாண்டுகளாக இயங்கியிருக்கிறது. அது மட்டுமல்ல வறிக சபா இன்றும் இலங்கையில் ஆதிவாசிகள் மத்தியில் நடைமுறையில் இருக்கிறது என்பது ஆச்சரியம் தரும் செய்து.

சாதி இறுக்கம் (தொடரும்)....

# முதாதையரின் காலடிகள்

## குறவன் பட்ட மலை



குறவன் பட்ட மலை கட்டைபறிச்சான் ஊடாக பள்ளிக்குடியிருப்பு செல்லும் வழியில் கணேசபுரத்தின் அடையாளமாக திகழும் நம் முன்னோர் வாழ்விடங்களாய் ஈழத் தமிழர்களின் தொல் நிலங்களில் ஒன்றாய் நீட்சி பெற்றிருக்கும் குன்று.

குன்றின் மேற்கு பகுதி கட்டைபறிச்சான் கணேச புரத்தை தொட்டு நிற்க, கிழக்கு அடிவாரம் சேனையூரின் நன்னித்துறையை அடுத்து வரும் கல் நெருக்க பணிவை தொட்டுநிற்கிறது.

பூவரசக் குடாவும் சோலைப் பள்ளமும் இந்த வழியால் செல்லும் பாதையாய் வரலாற்றைப் பேசி நிற்பதும் மக்கள் வாழ்வோடு ஒன்றித்த கலாசார வரலாற்று தொல்லியல் அடையாளமாய் தொடரும் குறவன் பட்ட மலை.

குறவன் பட்ட மலையை அண்டி சிறு சிறு பாறைக் குன்றுகளும் கற்களும் காணப் படுகின்றன. கல் நெருக்கத்தின் வழி உயர்ந்த பாறைகளில் சிறு குகைகள் போன்ற வழிகளும் தென்படுகின்றன.

என் அப்புச்சியோடு இந்த வழியால் பயணித்த போது, இந்தக் குகைகள் பற்றிய சந்தேகம் எப்போதும் இருக்கும். ஒரு நாள் அவரிடம் இவை பற்றி கேட்ட போது இவை பூதங்கள் மறைந்திருந்த குகைகள் என்று ஒரு கதை சொல்வார். விபரமாக கேட்ட போது கந்தளாய் குளம் பூதங்களால் கட்டப்பட்டதாகவும் குளம் கட்டி முடிந்தவுடன் பூதங்களை பராமரிக்க முடியாமல் போக அவற்றை அடக்க முதிரை மரங்களை குளத்தினுள் வெட்டிப் போட்டு கரை சேர்க்கும் படி கூற, அவற்றை தூக்கி தூக்க முடியாமல் ஒழித்தோடி கொட்டியாரத்தின் பல பகுதிகளுக்கும் வந்த பூதங்கள் எங்கள் ஊர் மலைக் குகைகளில் வந்து ஒழிந்ததாகவும் அவை உருட்டி விளையாடிய கற்கள்தான் இவை என்றும் அந்த கதை தொன்மமாய் இந்த நிலத்தில் புதையுண்டு கிடந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

கற்சுனையும் பச்சை பசேல் என்ற மரங்களின் கூட்டமுமாய் இயற்கையின் அழகை சொல்லி நிற்கும் குறவன் பட்ட மலை வரலாற்று தொல்லியல் புதையலாகவும் ஈழத் தமிழரின் தொன்மையை சொல்லி நிற்கிறது.



குறவன் பட்ட மலையின் பாறைகளில் காணப்படும் தமிழ் பிராமிக் கல் வெட்டு கிறிஸ்துவுக்கு முந்திய காலத்தை பேசி நிற்கிறது. தமிழ் பிராமிக்குரிய “ம” இங்கு பயன்படுத்தப் பட்டுள்ளமை இங்கு மனம் கொள்ளத் தக்கது.

மக்கள் வாழ்வுக்கு அரணாய் விளங்கும் இம் மலை சேனையூர் கட்டைபறிச்சான் மக்களின் தொன்மை வரலாற்றுக் கண்ணிகளில் ஒன்று என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

தொல் நிலங்கள் பாதுகாக்கப் பட வேண்டிய இடங்களில் குறவன் பட்ட மலையும் ஒன்று.

## கனடாவை வசிப்பிடமாக கொண்ட சசிகலா நரேந்திரன் விருது வழங்கிக் கௌரவிப்பு



கௌரவப்பட்டங்களையும் விருதுகளையும் வழங்கிவரும் அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சசிகலா நரேந்திரன் சாமசிறி விஸ்வகலாஜோதி, நர்த்தன கீர்த்தி, தேசஅபிமானி பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

மட்டக்களப்புக்கு வருகை தந்துள்ள சசிகலா நரேந்திரன் விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று மட்டக்களப்பில் அமைப்பின் தெசிய அமைப்பாளர் கலாபூசணம் சமாதானநீதவான் யூ.எல்.எம்.ஹனிபா தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழவில் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன், மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் தேசியப்பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி சாரததா ரவிச்சந்திரா கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டார். அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் கே.திருநாமம், மற்றும் உறுப்பினர்கள், உறவினர்கள், சசிகலா நரேந்திரனின் நண்பர்கள் எனப் பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். அததுடன், வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.



இசை, நடன, ஆசிரியரும், அழகுக்கலை நிபுணரும், சமூக சேவகியுமான மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்ட சசிகலா நரேந்திரன் திரு திருமதி விவேகானந்தா குணலட்சுமி தம்பதிகளின் முதல் மகளாவார். இவருக்கு நான்கு சகோதரிகளும் ஒரு சகோதரனும் உள்ளார். இவர் மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் உயர்தரம் கற்று, விபுலானந்தா இசை நடனக் கல்லூரியில் சங்கீத டிப்ளோமாவை நிறைவு செய்து 12 வருடங்கள் ஆசிரியராகக் கயாற்றியுள்ளார்.

இசை ஆசிரியராகவும், அரஜன் பியூட்டி அழகுக்கலை நிறுவனத்தின இயக்குனராகவும் செயற்பட்ட இவர், கேக், பிளவர் மேக்கிங், மணப்பெண் அலங்காரம் உள்ளிட்ட பயிற்சிகளையுமு் வழங்கினார். இதன் பயனாக 1998ம் ஆண்டு நவம்பரில் 100 மாணவர்களைக் கொண்டு 2 நாட்கள் கண்காட்சியொன்றை நடத்தினார்.

சங்கீத ஆநசிரியராகவும் உடற்பயிற்சி ஆசிரியராகவும் மாவட்டத்தின் பினதங்கிய பாடசாலைகளில் பணியாற்றிய இவர், விளையாட்டுப் போட்டிகள், இசை நடனப் போட்டிகளில் மாணவர்களைப் பங்குபெறச்செய்து வெற்றியடையச் செய்து வந்தார்.

1999ம் ஆண்டு குடும்பத்துடன் கனடா நாட்டுக்குச் சென்ற இவர், அங்கு சங்கீதத்தைப் பயிற்றுவித்ததுடன், 2003ம் ஆண்டு அரஜன் அழகுக்கலை நிறுவனமான இலங்கைத் தமிழர்களின் ஆதல் அழகுக்கலை நிறுவனத்தை ஆரம்பித்தார். இது பல பெண்கள் அழகுக்கலையைப் பயின்று தொழில்வாய்ப்புப்பெற உதவியது.

தொடர்ச்சி...

## புற்றுநோய்க்கு தீர்வு தருமா மரபணு மாற்றப்பட்ட கோழி முட்டைகள்?

என ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

மனித உடலுக்கு தேவையான மருந்துகளை உருவாக்குவது மற்றும் அதற்கான நெறிமுறைகளை செயல்படுத்துவதற்கு 10-20 வருடங்கள் ஆகும். இந்த கோழிகளை, மனிதர்களுக்கு மட்டுமல்ல விலங்குகளுக்கான மருந்துகளை தயார்படுத்தவும் பயன்படுத்தலாம் என ஆராய்ச்சியாளார்கள் தெரிவிக்கின்றனர்.

ஆண்டிபயோட்டிக்குகளுக்கு பதிலாக இந்த மருந்துகள் விலங்குகளின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். விலங்குகளின் பாதிக்கப்பட்ட நுரையீரல் மற்றும் சிறுநீரக பாகங்களை சரி செய்ய இந்த மருந்து பயன்படும். தற்போது அந்த மருந்துகளின் விலை அதிகமானவை. எனவே இந்த மருந்துகளை உருவாக்குவது மிகவும் பயனளிக்கும். "தற்போது நாங்கள் மனிதர்களுக்குத் தேவையான மருந்துகளைத் தயாரிக்கத் தொடங்கவில்லை ஆனால் இந்த மருந்து கண்டுபிடிப்புக்கு தேவையான புரதங்களை கோழிகள் எளிதில் வழங்க முடியும்" என்று இந்த ஆய்வில் தெரிகிறது என்கிறார் பேராசிரியர் ஹெலன்.

நன்றி : பிபிசி




# புற்றுநோய்க்கு தீர்வு தருமா மரபணு மாற்றப்பட்ட கோழி முட்டைகள்?



மரபணு மாற்றம் மூலம், மூட்டு வலி மற்றும் சில வகை புற்றுநோய்க்கு மருந்து தரும் முட்டைகளை இடும் கோழிகளை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்வதைக் காட்டிலும் இந்த மருந்துகளை முட்டையாக இடும்போது பல மடங்கு விலை மலிவானதாக உள்ளது.

பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகளை போன்று இந்தக் கோழிகள் துன்புறுத்தப்படமாட்டாது. மேலும் அவை அன்பாக கவனித்துக் கொள்ளப்படும்.

பெரிய பண்ணைகளில் வாழும், அதிக பயிற்சிபெற்ற தொழில்நுட்பவியலாளர்களால் இவைகளுக்கு உணவும், நீரும் வழங்கப்பட்டு தினமும் நன்றாக கவனித்துக் கொள்ளப்படும். அவை ஒரு வசதியான வாழ்க்கையை வாழும்.

இந்த கோழிகளை பொறுத்தவரை அவை எப்போதும் போல் முட்டைகளை இடுகின்றன எனவே அவற்றின் ஆரோக்கியத்துக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

முன்னதாக மரபணு மாற்றப்பட்ட ஆடுகள், முயல்கள் மற்றும் கோழிகள், முட்டை மற்றும் பால் மூலம் மனிதர்களுக்கு தேவையான புரதத்தை வழங்க முடியும் என விஞ்ஞானிகள் கண்டறிந்தனர்.

இந்த புதிய முயற்சி பழைய வழிமுறைகளை காட்டிலும் அதிக திறன் கொண்டது என்றும், குறைவான செலவில் நல்ல பலனை தரும் என்றும் தெரிவிக்கின்றனர்.

இம்மாதிரியான முட்டைகள், மருந்து தயாரிக்கும் செலவைக் காட்டிலும் பல மடங்கு குறைவாக இருக்கும் எனவே ஒட்டு மொத்தமாக தயாரிப்பு செலவுகள் குறையும் என எதிர்ப்பார்ப்பதாக என எடின்பரோவில் உள்ள ரோஸ்லின் டெக்னாலஜிஸை சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஹெரோன் தெரிவித்தார்.

தொழிற்சாலைகளில் மருந்துகளை தயாரிக்க சுத்தமான அறைகளை உருவாக்கும் செலவுகளைக் காட்டிலும் கோழிப் பண்ணைகள் உருவாக்குவது விலை குறைவே.



பல நோய்களுக்கு காரணம் நமது உடல் தானாகவே சில ரசாயனங்களையும், புரதங்களையும் உற்பத்தி செய்யாததே. அம்மாதிரியான நோய்கள், புரதங்களை கொண்ட மருந்துகளை கொண்டு சரி செய்யப்படும். அந்த மருந்துகள், மருந்து நிறுவனங்களால் செயற்கையாக தயாரிக்கப்படுகின்றன.

ஹெரோன் மற்றும் அவரது குழுவினர் மனித உடலில் புரதத்தை உற்பத்தி செய்யும் மரபணுவை, கோழி முட்டையில் வெள்ளை கருவை உற்பத்தி செய்யும் டிஎன்ஏவில் செலுத்தினர்.

## முட்டை கருவில்

கோழி முட்டையில் வெள்ளை கருவை பிரித்து பார்த்ததில், கோழியில் அதிகப்படியான புரதம் இருப்பதை ஹெரோன் கண்டறிந்தார்.

அதில் மனித நோய் எதிர்ப்பு சக்திக்கு தேவையான இரண்டு வகையான புரதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒன்று வைரஸ் கிருமிகள் மற்றும் புற்றுநோய்க்கு எதிரானதாக செயல்படும் IFNalpha2a. மற்றொன்று சேதமடைந்த திசுக்களை தானாக சரி செய்து கொள்ள உதவும் மேக்ரோஃபேஜ் - சிஎஸ்எஃப்

ஒரு கோழி ஒரு வருடத்துக்கு 300 முட்டைகளை இடும். எனவே கோழிகளின் எண்ணிக்கை போதுமானதாக இருந்தால் இதை வணீக ரீதியாக செயல்படுத்தலாம்

# மட்டு மாநகர சபை

## குப்பையகற்றலில் பொதுமக்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும்



இலங்கையிலுள்ள 24 மாநகர சபைகளுடன் ஒப்பிடுகையில் மட்டக்களப்பு மாநகர சபை, குப்பை அகற்றும் செயற்பாடுகளில் சிறப்பாக செயல்பட்டு, தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்டு, அதற்காக சில விருதுகளும் பெற்றுள்ளது. ஆனால் அதிகரித்து வரும் சனத்தொகை பெருக்கத்திற்கும் சர்வதேச ரீதியான ஒப்பீடுகளுக்கும் அமைவாக மட்டக்களப்பு மாநகரசபையின் திண்மக்கழிவகற்றல் செயற்பாடுகள் மேலும் செம்மைப்படுத்தப்படவேண்டும். அது இங்கு வாழும் குடியிருப்பாளர்களின் கைகளில் தங்கியுள்ளது. அமைகின்றது. அவர்களும் மனிதர்கள்தான். எனவே பொதுமக்களின் பங்களிப்பு அளப்பரியதாக அமைகின்றது.

அன்பழகன் குரூஸ் (JP) M.A, P.G.Dip in Edu, Dip in LG.
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

மட்டக்களப்பு மாநகரசபை திண்மக்கழிவகற்றலுக்காக மாதமொன்றுக்கு சுமார் அறுபது லட்சம் ரூபாய்கள் செலவு செய்கின்றது. அத்துடன் 23 வாகனங்களும், 92 நிரந்தர தொழிலாளர்களும், சுமார் 60 வரையான அமைய அடிப்படையிலான தொழிலாளர்களும் தினந்தோறும் பயன்படுத்தப்படுகின்றனர். இவ்வளவு பாரிய பிரயத்தனத்துடன், மட்டக்களப்பைத் தூய்மையான நகராகப் பராமரிப்பதற்கு மாநகரசபை படும்பாட்டை பொதுமக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் நாம் வீசும் குப்பைகளை நம்மைப் போன்றவர்கள்தான் தங்கள் கைகளால் அகற்றுகின்றனர். அதிக அளவில் அவர்கள் நோய்களுக்கு இலக்காவதுடன், அவர்களது ஆயுட்காலமும் கேள்விக்குறியாக குறிப்பாக இன்று மாநகரசபை எதிர்நோக்கும் சில சவால்களை மக்கள் அறிந்திருக்க வேண்டும்.

1) அதிக அளவான பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகள்.

2) நிரம்பி வழியும் திருப்பெருந்துறைக் கழிவுகளைக்கொட்டுமிடம்.

3) வீதிகளில் மற்றும் வாவியில் குப்பைகளை வீசியெறியும் விசமிகள்.

இந்த நிலையை மாற்ற மக்கள் என்ன செய்ய வேண்டும்.

I) ஒவ்வொரு வீட்டிலும் கூட்டெரு தயாரிப்பதற்கான பொறிமுறையொன்றை தாமாகவே தயார்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். இதனால் சிறந்த பசளை

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## பாலர் பாடசாலையின் கால்கோள் நிகழ்வு



மட்டக்களப்பு மாநகர சபையினால் நிர்வகிக்கப்படும் நாவற்குடா சுத்தானந்தா பாலர் பாடசாலையின் கால்கோள் நிகழ்வு இன்று காலை இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் திருமதி சுந்தரமதி வேதநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

2019ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வுடன் கால்கோல் விழா ஆரம்பமானதுடன், மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

நிகழ்வில் மாநகர ஆணையாளர் க.சித்திரவேல், மற்றும் மாநகர சபை உறுப்பினர்களான ம.நிஸ்கானந்தராஜா, சீ.ஜெயந்திரகுமார், ஐ.சிறிதரன், திருமதி. செல்வி மனோகர் ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## மட்டக்களப்பு மாநகர சபையுடன் இணைந்து திட்டங்களை அமுல்படுத்த விருப்பம்

பிரதேச சபையாக இருந்து தரமுயர்த்தப்பட்டுள்ள பொலன்நறுவை மாநகர சபையின் முதல்வர் தாம் மட்டக்களப்பு மாநகர சபையுடன் இணைந்து பல திட்டங்களை நடைமுறைப்படுத்த விரும்புவதாக கூறியுள்ளார்.



பொலனறுவை மாநகர முதல்வர் மட்டக்களப்பு மாநரக சபைக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டார்.

பொலன்நறுவை உள்ளுராட்சி சபையானது பிரதேச சபையாக இருந்து ஜனாதிபதியினால் மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து அம் மாநரக சபையின் முதலாவது மாநரக முதல்வாராக சானக ரணசிங்க தெரிவு செய்யப்பட்டார்.

அதனையடுத்து அவர் மட்டக்களப்பு மாநகர சபைக்கு தனது உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டார்.

இவரை மட்டக்களப்பு மாநகர பிரதி முதல்வர் மற்றும் ஆணையாளர் உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர்.
மட்டக்களப்பு மாநரக சபையின் சிறப்பான செயற்பாடுகள் தொடர்பாக பொலன்நறுவை முதல்வர் பாராட்டியதோடு, தமது மாநகர சபையின் பயணத்தில் மட்டக்களப்பு மாநரக சபையின் நிர்வாகக் கட்டமைப்புகளையும் நல்ல பல திட்டங்களையும் நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகரசபை உறுப்பினரும், வேலைகள் குழுவின் தலைவருமான த. இராஜேந்திரம் உட்பட மாநகர ஆணையாளர், பிரதி ஆணையாளர், பொறியியலாளர், கணக்காளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கண்காணிக்க கண்காணிப்புக் கமெரா

(மட்/நிருபர் திருவரங்கன்)

மட்டு.மாநகரசபை நகரின் முக்கிய இடங்களை கண்காணிக்கவும், பாதுகாப்புக் கருதியும் கண்காணிப்புக் கமெராக்களை சில இடங்களில் பொருத்தியுள்ளது.

இதில் திருமலை வீதி, முனைவீதி, மகாத்மாகாந்தி வீதி, பிரதானவீதி, மத்தியவீதி என பல இடங்களையும் மாநகரத்தின் தந்தை தனது செயலகத்தில் இருந்தவாறே கண்காணித்துக் கொள்ளலாம்.

இதுபற்றி பிரதி மாநகரபிதா க. சத்தியசீலன் அவர்களிடம் பிரஸ்தாபித்தபோது கமெரா பூட்டப்பட்ட சில இடங்களையும் நேரடியாக சுட்டிக்காட்டினார். இதற்கான ஒதுக்கீடுகளை யார் செய்தது என்று வினவியபோது முஸ்லீம் வர்தகர்களின் ஆதரவுடன் மட்/ வர்த்தகசங்கம் ஒத்துழைப்பு வழங்கியதாக பிரதி முதல்வர் தெரிவித்தார்.


## இதுவும் ஒரு நல்ல ஐடியா



### இரும்பு வலைகள்

மட்டக்களப்பு கல்லடிப்பாலம் இலங்கையில் ஒரு பிரசித்திபெற்றபாலம். இப்போது அது தற்கொலைக்கும் பிரசித்திபெற்றுவருகின்றது.

மட்டு மாநகரசபையின் கீழ் அது பராமரிக்கப்பபட்டு வருகிறது. எனவே தற்கொலைகளை தடுக்கும் முகமாக பாவத்தின் கீழ் இரும்பு வலைகளை அமைத்தால் என்ன?





லியோண்

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 21

## க.பொ.த. (உ/த) - புதிய பாடத்திட்டம் - தமிழ்

- மட்டுநகர் யுவன் -

புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாகத் தமிழ்ப் பாடத்துக்குரிய வினாத்தாளின் கட்டமைப்பு 2019இல் இருந்து பின்வருமாறு அமையவுள்ளது. எனவே, மாணவர்களும் ஆசிரியர்களும் கல்வி அதிகாரிகளும் இந்த விடயத்தில் கவனம் செலுத்துவது மிகவும் இன்றியமையாததாகும்.

### தமிழ்ப் பாடத்துக்குரிய வினாத்தாள் அமைப்பு:

- வினாத்தாள் I : (40 + 60 = 100 புள்ளிகள்)

மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாக இருக்கும். மேலதிக வாசிப்பு நேரமாக, பத்து நிமிடங்கள் வழங்கப்படும். இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி I : கட்டாய வினாக்கள் இரண்டு இருக்கும். 1ஆம் வினாவுக்கு 24 புள்ளிகள், 2ஆம் வினாவுக்கு 16 புள்ளிகள். (24 + 16 = 40 புள்ளிகள்).

பகுதி II : இதில் ஆறு வினாக்கள் இருக்கும். இவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள். மூன்று வினாக்களுக்கும் 60 புள்ளிகள். (20 x 3 = 60 புள்ளிகள்).

**எல்லாமாக 5 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.**
(24 + 16 + 20 + 20 + 20 = 100 **புள்ளிகள்).**

- வினாத்தாள் II : (70 + 30 = 100 புள்ளிகள்)

மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாக இருக்கும். மேலதிக வாசிப்பு நேரமாக, பத்து நிமிடங்கள் வழங்கப்படும். இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி I : கட்டாய வினாக்கள் மூன்று இருக்கும். 1ஆம் வினாவுக்கு 20 புள்ளிகள், 2ஆம் வினாவுக்கு 25 புள்ளிகள், 3ஆம் வினாவுக்கு 25 புள்ளிகள். (20 + 25 + 25 = 70 புள்ளிகள்).

பகுதி II : இதில் ஐந்து வினாக்கள் இருக்கும். இவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவுக்கு 15 புள்ளிகள். இரண்டு வினாக்களுக்கும் 30 புள்ளிகள். (15 x 2 = 30 புள்ளிகள்)

**எல்லாமாக 5 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.**
(20 + 25 + 25 + 15 + 15 = 100 **புள்ளிகள்).**

- வினாத்தாள் I : 100 புள்ளிகள்
- வினாத்தாள் II : 100 புள்ளிகள்)
- இறுதிப்புள்ளி : 200/2 = 100 புள்ளிகள்

### கட்டாய வினாக்கள்

**வினாத்தாள்** Iஇல் இரண்டு வினாக்கள் இருக்கும்.
முதலாவது வினா (அ), (ஆ) என இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும். இந்த இரண்டு பகுதிகளிலும் செய்யுள் தரப்பட்டிருக்கும். அவற்றை அடிப்படையாகக் கொண்ட மும்மூன்று வினாக்கள் இருக்கும். (அ) பகுதிக்கு 12 புள்ளிகள், (ஆ) பகுதிக்கு 12 புள்ளிகள். (12 + 12 = 24 புள்ளிகள்).

இரண்டாவது வினாவும் (அ), (ஆ) என இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும். ஆனால் வித்தியாசம் உண்டு. அதாவது (அ) பகுதியானது கவிதையாகவும் (ஆ) பகுதியானது உரைநடையாகவும் இருப்பதுடன் இவற்றுள் ஒரு பகுதிக்கு மட்டுமே விடையளித்தல் வேண்டும். அதாவது (அ) பகுதிக்கு **அல்லது** (ஆ) பகுதிக்கு விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் நந்நான்கு வினாக்கள் இருக்கும். (அ) பகுதிக்கும் 16 புள்ளிகள், (ஆ) பகுதிக்கும் 16 புள்ளிகள். (மொத்தம் 16 புள்ளிகள்).

**வினாத்தாள்** IIஇல் மூன்று வினாக்கள் இருக்கும்.
முதலாவது வினா, 20 பல்தேர்வு இலக்கண வினாக்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு வினாவும் 5 விடைகளைக் கொண்டிருக்கும். அவற்றுள் சரியான விடையைத் தெரிவுசெய்து, அவ்விடைக்குரிய இலக்கத்தை அருகிலுள்ள அடைப்புக்குறிக்குள் எழுத வேண்டும். (1 x 20 = 20 புள்ளிகள்).

**குறிப்பு :** சுருக்க விடை எழுதுமாறு கேட்கப்படுகின்ற இலக்கண வினா கட்டாய வினா என்ற வகுதிக்குள் இல்லை. அது, விருப்புத் தேர்வுக்குரிய வினாவாக அமைந்துள்ளது.

இரண்டாவது வினா, (அ), (ஆ) என இரு பகுதிகளைக் கொண்டிருக்கும். (அ) பகுதியில் சுருக்கமும் (ஆ) பகுதியில் கிரகித்தலும் இருக்கும். (அ) பகுதிக்கு 13 புள்ளிகள், (ஆ) பகுதிக்கு 12 புள்ளிகள். (13 + 12 = 25 புள்ளிகள்).

மூன்றாவது வினா, கட்டுரை வினாவாகும். இதில் ஐந்து தலைப்புக்கள் தரப்பட்டிருக்கும். அவற்றுள் யாதேனும் ஒன்றைத் தெரிவுசெய்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரையை எழுதுதல் வேண்டும். இவ்வினாவுக்கு (25 புள்ளிகள்).

**குறிப்பு : வினாத்தாள்** Iஇல் உள்ள கட்டாய வினாக்களுக்கு 40 புள்ளிகளும் **வினாத்தாள்** IIஇல் உள்ள கட்டாய வினாக்களுக்கு 70 புள்ளிகளும் வழங்கப்படுவதை அக்கறையுடன் கவனத்திலெடுத்து உங்கள் செயற்பாடுகளை முன்னெடுப்பதால் பயன்கள் உண்டு.

# கற்போம்

## உயிர் அங்கிகளின் மூலக உள்ளடக்கம்

குணம் சவரிராஜா

02 தொடர்ச்சி...

19. வெப்பநிலைக்கு ஏற்புடைத்தன்மையடையும் நீரின் ஆற்றல் உயிர்த் தொகுதிகளில் எவ்வாறு பயன்படுகின்றது?
    - தனது சொந்த வெப்பநிலையில் ஏற்படும் ஓர் சிறிய மாற்றத்தினால் சார்பளவில் உயர்ந்த அளவான வெப்பச் சக்தியை உறிஞ்ச அல்லது வெளியேற்ற நீரினால் முடிகின்றது.
    - உயர் தன்வெப்பம் காரணமாக உயிர்த்தொகுதியிலும் நீர்நிலைகளிலும், புவியில் வெப்பநிலை ஏற்றத்தாழ்வுகளின்போது வெப்பநிலைக்குரிய ஒரு தாங்கற்பதார்த்தமாக நீர் தொழிற்படும்.
    - ஆவியாதலின் உயர் வெப்பம் காரணமாக, அதிகுறைந்தளவான நீர் இழப்புடன் நீரினால் பெருமளவு வெப்பத்தை இழக்கக்கூடியதாக உள்ளது.
    - ஆகவே அங்கி ஒன்றின் உடல் மேற்பரப்பானது குளிரான மேற்பரப்பாகப் பேணப்படுகின்றது. அங்கிகளின் உடலை உயர்வெப்பமேற்றப்படுதலில் இருந்து தடுக்கின்றது.
    - மனிதத் தோலில் இருந்து வியர்வை ஆவியாதல் உடல் வெப்பநிலையை மாறிலியான மட்டத்தில் பேண உதவுகின்றது
    - தாவரங்களில் ஆவியுயிர்ப்பு தாவர உடல் மேற்பரப்பை ஓர் குளிரான மேற்பரப்பாக வைத்து சூரிய ஒளியில் மிகுதியாக வெப்பமடைதலில் இருந்து தடுக்கின்றது.

20. உறைதலின்போது நீர் விரிவடைதல் நீர்வாழ் அங்கிகளின் தப்பிப்பிழைத்தலுக்கு எவ்வகையில் உதவுகின்றது?
    - 4C க்குக் கீழாக நீரின் வெப்பநிலை குறையும்பொழுது, அது உறைய ஆரம்பிக்கின்றது.
    - அத்துடன் அது பனிக்கட்டிக் கனவடிவங்கள் எனப்படும் பளிங்குத்தன்மையானதோர் நெய்யரியைத் தோற்றுவிக்கின்றது.
    - ஆகவே 4C யில் நீர் உச்சளவான அடர்த்தியைக் கொண்டு காணப்படுகின்றது
    - எனவே பனிக்கட்டி நீர்நிலைகளின் மேற்பரப்பில் மிதக்கின்றது.
    - இது துருவப் பிரதேசங்களில் நீரின் முக்கியமானதோர் இயல்பாக விளங்குகின்றது. இதனால் அங்கு மாரிகாலத்தின்போது நீர்நிலைகளில் உள்ள அங்கிகள் தப்பிப்பிழைக்கக்கூடியனவாக உள்ளன.

21. நீர் ஓர் சிறந்த கரைப்பானாக விளங்குவதற்கு நீர் மூலக்கூறுகள் கொண்டுள்ள சிறப்பான அம்சம் யாது?
    - அவற்றின் முனைவுத்தன்மை காரணமாக இந்த ஆற்றல் நீருக்கு வழங்கப்படுகின்றது.
    - முனைவுக்குரிய மூலக்கூறுகள் (உ.ம். குளுக்கோஸ்), முனைவுத்தன்மையற்ற மூலக்கூறுகள் (உ.ம். NaCl), முனைவுத்தன்மை கொண்டதும் அயனுக்குரியதுமானவை (இலைசோசைம்கள்) நீரில் கரையக்கூடியன.
    - ஒவ்வொரு கரைய மூலக்கூறையும் நீர் மூலக்கூறுகள் சூழ்ந்து அவற்றுடன் ஐதரசன் பிணைப்புகளை ஏற்படுத்திக்கொள்வதே இதற்குரிய காரணமாகும்.
    - கரையுமியல்பு முனைவுத்தன்மையில் தங்கியுள்ளதே தவிர, அவற்றின் அயனுக்குரிய தன்மையில் தங்கியிருப்பதில்லை.

22. உயிர்ப்பதார்த்தங்களில் காணப்படும் கூடிய அளவிலான அசேதனச் சேர்வை நீர் ஆகும். அங்கிகளில் நீரினால் மேற்கொள்ளப்படும் நான்கு பிரதான தொழில்கள் யாவை?
    1. முதலுருவின் பிரதான உள்ளடக்கமாக விளங்குதல்
    2. சிறந்த கரைப்பானாகத் தொழிற்படுதல்.
    3. தாக்கியாகப் பங்குபற்றுதல்
    4. விறைப்புத் தன்மையை/ வீக்கத்தை ஏற்படுத்துதல்.

23. அங்கிகளில் நீரினால் மேற்கொள்ளப்படும் வேறு தொழில்கள் யாவை?
    1. நீர்வாழ் அங்கிகளின் வாழிடம்.
    2. அங்கிகளில் பதார்த்தங்கள் உள்ளெடுக்கப்படலும் கொண்டுசெல்லலும்.
    3. அங்கிகளில் ஏற்படும் வெப்ப மாற்றங்களைத் தடுத்தல்.
    4. உடல் மேற்பரப்பைக் குளிர்வித்தல்.
    5. நீர்நிலைகள் முற்றாகவே உறைந்து விடாமல் தடுத்தல்.
    6. கருக்கட்டலில் உதவுதல்.
    7. பரம்பலுக்கு உதவுதல்.
    8. வித்துமுளைத்தலை ஊக்குவித்தல்.
    9. பிரசாரணச் சீராக்குதல்.
    10. விலங்குகளில் நீர்நிலையியல் வன்கூடாகத் தொழிற்படுதல்.

பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# விளையாட்டு

## மட்டுநகரின் உதைபந்தாட்டத்தில் பல தலைமுறைகளுடனும் பயணித்த அமரர் ஈ.வேதநாயகம்



மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் பல வீரர்கள் தாம் உதைபந்தாட்டத்தில் பிரகாசித்த காலங்களில் கால்பந்தாட்டத்தின் விருத்திக்காகப் பணியாற்றி விட்டு, தமது ஓய்வு காலங்களில் கால்பந்தாட்டத்திலிருந்து விலகி வாழ்ந்துள்ளார்கள். ஆனாலும் சில குறித்த வீரர்கள் தமது முதுமைக் காலங்களிலும் கால்பந்தாட்டத்திற்காக வெவ்வேறு பணிகளையாற்றி மட்டுநகரின் கால்பந்தாட்டத்தினூடு பயணித்துப் பணியாற்றியுள்ளார்கள். இத்தகைய ஆளுமைகளுள் ஒருவராகவே மறைந்த திரு ஈ.வேதநாயகம் ஐயா அவர்களை அடையாளங் காண முடிகின்றது.



திரு ஈ.வேதநாயகம் அவர்கள் ஒரு சிறந்த கால்பந்தாட்ட நடுவராகக் கடமையாற்றி

**து.கௌரீஸ்வரன்**

மட்டுநகரில் கால்பந்தாட்டம் செழிக்க காரணமாக இருந்துள்ளார். மட்டக்களப்பின் ஜாம்பவான் கால்பந்தாட்ட வீரர்கள் பலரும் முறையாகக் கால்பந்தாட்டத்தில் விருத்தி பெறுவதற்கு வழிப்படுத்திய கால்பந்தாட்ட நடுவராக இவர் தனது இளமைக் காலத்தில் பணியாற்றியுள்ளார். உதாரணமாக மூத்த வீரர்களான ரெட்ணா, ஜெயசூரியம், ஜெயா முதலியோர் கால்பந்தாட்டம் ஆடிய காலத்தில் அவர்களது ஆட்டத்தினை மதிப்பீடு செய்த நடுவராக திரு. வேதநாயகம் அவர்கள் இயங்கியுள்ளார்.

திரு வேதநாயகம் அவர்கள் முதுமையடைந்த போதும் வீட்டிலே முடங்கி வாழ விரும்பவில்லை. மாறாகத் தினமும் தனது இல்லத்திற்கு அண்மையிலுள்ள வெபர் மைதானத்தில் வந்து கால்பந்துப் போட்டிகளைப் பார்வையிடுவதில் மிகவும் ஆர்வமாகவே இருந்தார்.

நாட்டு நிலைமை காரணமாக ஸ்தம்பித்திருந்த கால்பந்துச் சங்கத்தை 1990 களின் பின்னர் மீண்டும் மட்டக்களப்பில் இயங்கச் செய்வதிலும் அவ்வியக்கத்தை தொடரச் செய்வதிலும் திரு வேதநாயகம் ஐயா அவர்கள் மிகவும் காத்திரமான பணிகளை ஆற்றியுள்ளார்.

அக்காலத்தில் கால்பந்தாட்ட நிருவாக நடவடிக்கைகளில் இயங்க வேண்டிய புதிய தலைமுறையினருக்கான பற்றாக்குறை நிலவியதால் இயங்க ஆர்வஞ் செலுத்திய மிகச்சில இளையவர்களுடன் இணைந்து வேதநாயகம் ஐயா அவர்கள் சிறப்பாகப் பணியாற்றினார். சங்கத்தில் பெரிய பதவிகளை அவர் எதிர்பார்க்கவில்லை மாறாக சுற்றுப் போட்டிக் குழுவிற்கான இணைப்பாளராகப் பல வருடங்கள் பணியாற்றி போட்டிகள் தொடர்ச்சியாக நடைபெறுவதற்கு காரண கர்த்தாவாக இயங்கினார்.
வெபர் மைதானத்தில் பிற்பகல் பொழுதில் வெள்ளை வேட்டியும், வெள்ளை மேலாடையும் அணிந்த மூக்குக் கண்ணாடியுடன் தோன்றும் வேதநாயகம் ஐயாவை காணும் போது இன்றைக்கு கால்பந்துப் போட்டி நடைபெறும் என்பதை உறுதிப்படுத்த முடியுமாக இருந்தது. ஆனால், அவர் நடுவராகப் பணியாற்றினால், அவரை முழுமையான கறுப்பு உடையிலேயே காணமுடியும். அந்தளவிற்கு முன் கூட்டியே மைதானம் வந்து அதற்கான முன் ஏற்பாடுகளை வேதநாயகம் ஐயா செய்துகொள்ளுவார்.

இவ்வாறு பணியாற்றிய இவருக்கு மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தின் கௌரவமும், இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கௌரவமும் கிடைக்கப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மட்டுநகரின் கால்பந்தாட்டத்திற்கு தனது முதுமைக் காலம் வரை அரும்பணியாற்றிய அமரர் வேதநாயகம் ஐயாவை இலேசில் மறக்கவே முடியாது.

## பிரதேச மட்ட பூப்பந்தாட்ட போட்டியில் KSC சம்பியன்!





காரைதீவு பிரதேச செயலக மட்ட விளையாட்டு போட்டியானது நேற்று பூப்பந்தாட்ட போட்டியுடன் ஆரம்பமானது. இப்போட்டி காரைதீவு விபுலாநந்தா மத்தியகல்லூரியின் உள்ளக அரங்கில் நடைபெற்றது.
போட்டியில் காரைதீவு விளையாட்டுக் கழகம் சம்பியனானதுடன் ஜொலிகிங்ஸ் விளையாட்டு கழகம் இரண்டாமிடத்தை பெற்றுக்கொண்டது.

ஆரம்ப போட்டியில் விவேகாநந்தா விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டு ஜொலிகிங்ஸ் விளையாட்டுக்கழகம் இறுதிப்போட்டிக்கு தெரிவாகியிருந்தது. இங்கு போட்டி இடம்பெறுவதையும் வெற்றியீட்டிய கேஎஸ்ஸி அணியையும் காணலாம்.

## விபுலாநந்தாவில் மரதன்ஓட்டம்



காரைதீவு விபுலாநந்தா மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியை முன்னிட்டு நேற்று மாணவரிடையே மரதன் ஓட்டப்போட்டி நடைபெற்றது. அதனை கல்லூரியின் பழையமாணவனும் காரைதீவு வைத்தியசாலை வைத்திய அதிகாரியுமான டாக்டர் மென்டிஸ்அப்பு பிரசாத் கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார். இப் போட்டியில் மூன்று இல்லங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி வீரர்கள் கலந்துகொண்டனர்.

சிறப்பாக இடம்பெற்ற மரதன் ஓட்டம் காரைதீவின் தேரோடும் வீதிவழியாக சென்று மீண்டும் கல்லூரியை வந்தடைந்தது. இப்போட்டிக்கு நடுவராக விளையாட்டு உத்தியோகத்தர் எல். சுலக்சன் கடமையாற்றினார். இப்போட்டியில் மருதம் இல்லம் முதலாம் மற்றும் மூன்றாம் இடம்களை பெற்றுக்கொள்ள, முல்லை இல்லம் இரண்டாமிடத்தை பெற்றுக்கொண்டது. இப்போட்டியின் முடிவின் அடிப்படையில் மொத்த புள்ளிகளின் கூட்டுத்தொகையின் தரவரிசைப்படி மருதம் இல்லம் 65 புள்ளிகளுடன் முதலிடத்திலும் குறிஞ்சி இல்லம் 43 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் முல்லை இல்லம் 42 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலும் உள்ளன.
(படங்கள் காரைதீவு நிருபர் சகா)

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa



ஆரையம்பதி கண்ணகை அம்மன் கோவில்

வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---

# பத்தாசி சார் தெய்வ வழிபாடுகள்

முருகன், பிள்ளையார், சிவன், திருமால் போன்ற பெரும் தெய்வங் களைப் பந்தலிட்டு வணங்கும் வழக்கம் இங்கில்லை,

அத் தெய்வங்களுக்கு எல்லாம் கற்கோயில்களே உள்ளன.

அவற்றிற்குரிய வணக்க முறைகள் கூட வித்தியாசமானவை. தெய்வ வணக்க முறைகளுக்குரிய சன்னதம் கொண்டாடல், காவியம் பாடல், உடுக்கு அடித்தல், மடை வைப்பு, மந்திர உச்சாடனம் என்பன இப்பெரும் தெய்வக் கோயில்களில் இல்லை என்பது அவதானித்தற்குரியது.

பெரும் தெய்வங்கட்குத் தினப்பூசை நடாத்தப்பட சிறு தெய்வங்கட்கு ஆண்டுப் பூசை நடாத்தப்படுகிறது. பெரும் தெய்வ வழிபாட்டில் ஆகம நெறி முக்கியத்துவம் பெற, சிறு தெய்வ வழிபாட்டில் புராதன வழிபாட்டு முறைகள் முக்கியம் பெறுகின்றன. சிறு தெய்வ வழிபாட்டு முறைகள் தனித்துவம் வாய்ந்தவை.


ஒவ்வொரு தெய்வ வழிபாடும் எவ்வாறு நடத்த வேண்டும் என்ற விதி முறைகள் உண்டு. இவ்விதிமுறைகள் எழுதி வைக்கப்பட்டுள்ளன. இவ்விதி முறைகளைப் பத்தாசி என்பர். பத்ததி என்பதன் இன்னொரு பெயர்தான் பத்தாசி

இச் சிறுதெய்வக் கோயிலில் பூசை பண்ணுபவர் பூசாரியார் என அழைக்கப்படுகிறார். இவரைக் கட்டாடியார் எனவும் அழைப்பர். இவர் ஏனைய காலங்களில் அக்கிராமத்தில் தமது சாதியினர்க்குரிய தொழிலையோ அல்லது தனக்குகந்த வேறு தொழிலையோ செய்பவராக இருக்கிறார். ஆண்டுக்கொரு தடவை சடங்கு நடைபெறுகையில் இவர் சடங்கு முடியும் வரை கோயிலிற் தங்கி,பூசையை நடத்துகிறார். அச்சமயம் இவருக்கு அதற்கான ஊதியம் ஊரவர்களினாற் கோயில் மூலம் கொடுக்கப்படுகிறது. இப்பூசாரியார் மந்திரம் அறிந்தவராய் இருக்கவேண்டும். இம்மந்திரத்தையும், தெய்வத்தை வசியப்படுத்தும் தம்பனம் பண்ணும் அட்சர முறைகளையும், இவர் பாரம்பரியமாகத் தந்தையிடமிருந்தோ அல்லது இன்னொரு வயது முதிர்ந்த அனுபவம் மிக்க பூசாரியாரிடமிருந்தோ கற்றுக் கொள்கிறார்.

ஒவ்வொரு தெய்வத்தை அழைப்பதற்கும் ஒவ்வொரு விதமான மந்திரமுண்டு. அதேபோல இத் தெய்வங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் மந்திரங்கள் உண்டு என நம்பப்படுகிறது.

நரசிங்கம், மாரி, காளி, கண்ணகி, பெரிய தம்பிரான், வைரவர் போன்ற ஒரு சில குறிப்பிட்ட தெய்வங்கள் மாத்திரமே உருவங்கள் அமைக்கப்பட்டு கோயிலின் மூலஸ்தானத்தில் அமர்த்தப்பட்டுள்ளன.

ஏனைய தெய்வங்களுக்கு உருவங்களில்லை. உருவம் பெற்றவையும், பெறாதவையுமான இவை பூசாரியார்




மந்திரம் கூறி அழைத்தால் குறிப்பிட்ட ஒருவரில் வெளிப்படும் என்று நம்பப்படுகிறது. எல்லோரிலும் இத் தெய்வம் வெளிப்படாது. தந்தைக்குப் பின் மகன் என்ற முறையிலேயே இவை வெளிப்படும். இடையிட்டு வருவதுண்டு. அது மிகக் குறைவு.

இவ்வண்ணம் தெய்வம் வெளிப்பட்டு வருபவர்கள் ஒரு கிராமத்தில் ஒரு சாதியில் மிக மிகச் சிலரே இருப்பர். இவர்கள் ஆண்டுக்கொரு தடவை குறிப்பிட்ட கோயிலில் சடங்கு முடியும் வரையும் தங்கி, தம்மீது வெளிப்படும் தெய்வத்தை மக்களுக்கு உணர்த்துவர். மக்கள் நோய்நொடி தீர ஆலோசனை கூறுவர். பூசாரியாரைப் போல சடங்கு நடைபெறாத ஏனைய நாட்களில் இவர்களும் தம் சாதித் தொழிலில் அல்லது வருவாய் தரும் வேறு தொழில்களில் ஈடுபட்டிருப்பர்.

ஆண்டுக்கொரு தடவை கோயிலிற் கூடும் இவர்கள் மீது குறிப்பிட்ட தெய்வத்திற்குரிய மந்திர உச்சாடனம் செய்து, அத்தெய்வத்தை வரவழைத்து அதனோடு பேசி, மக்களுக்கு அதனைக் கொண்டு நல் வாக்குகள் கூற வைத்துச் சடங்கினைப் பூசாரியார் நடத்துவார். தெய்வம் ஏறி ஆடும் இவர்களின் தெய்வ வாக்கினைக் கட்டு எனவும் இங்கு அழைப்பர்.

கட்டுச் சொல்லுவோர் வழக்கமான சொற்களால் ஒரு பொருளைக் குறியாது தகுதி வழக்கில் சொற்களைப் பிரயோகிப்பர். உதாரணமாக இறப்பதைச் செடி மண்டிப் போதல் எனவும், கோயிலை ஆலயம் எனவும், மக்களைக் குஞ்சான்கள் எனவும், வீட்டினைக் குதிரைக்கோடு எனவும், சென்ற வருடத்தை மேலாண்டு எனவும், ஆட்டினை நாலுகால்பட்ட வாகனம் எனவும் அழைப்பர். கட்டுச் சொல்லி வெறியாடும் முறை எமது பண்டைய வணக்கமுறை என்பது மனங்கொள்ளத்தக்கது.

ஆடுபவர்கள் இதற்கெனப் பிரத்தியேகமான கொடுக்கணிந்து, மஞ்சள்பூசி, வேப்பிலையைக் கையிற் பிடித்து, கைகளில் சிலம் பணிந்து ஆடுவார்கள்.

இவர்கள் ஆடும்பொழுது அவர்களின் ஆட்ட லயத்திற்குத் தக உடுக்கு, தவில், சவுணிக்கை ஆகியன அடிக்கப்படும். சிலம்பு, அம்மனக்காய் ஆகியன குலுக்கப்படும். குறிப்பிட்ட தெய்வக்காரர் அத்தெய்வமாகி ஆடுகின்ற பொழுது பார்வையாளரான மக்கள் அவரைத் தெய்மாகப் பாவித்து வணங்குவர். அவரோடு உரையாடுவர். இதன்மூலம் தெய்வத்துடன் தாம் நேரடியாகக் கதைக்கிறோம் என்ற உணர்வுடன் இவர்கள் இருப்பார்கள்.

இச்சிறு தெய்வ வழிபாடு இரண்டு அமிசங்களையும் அடக்கியது. ஒன்று வளம் வேண்டி நடாத்தப்படும் சடங்கு. உதாரணமாக மாரி அம்மன் குளுத்தி, கண்ணகி அம்மன் குளுத்தி ஆகியன. வெம்மை

தணிந்து மாரி பெய்ய வேண்டும்; மழை பொழிய நெல் விளைய வேண்டும்; என வளம் வேண்டிநடத்தப்படும் சடங்குகளாகும்.

மற்றது நோய்களைத் தருகின்ற தெய்வங்களான சில தெய்வங்களுக்கு



அம்மனைக்காயும் சிலம்பும்

நோய் தீர்க்க எடுக்கப்படும் சடங்குகளாகும்.

குறிப்பிட்ட தத்தமது குல தெய்வங்களை வருடாவருடம் இவ்வண்ணம் சடங்கு செய்து சாந்தி செய்யாதுவிடின் தம் சாதி, குலம் அழிந்து விடும் என்ற பாரம்பரிய நம்பிக்கை காரணமாக நடாத்தப்படும் சடங்குகளும் உண்டு.



பண்டைய முறைப்படி அமைந்த இச்சடங்குகள் பார்வையாளர்கள் சடங்கை நடத்துவோர்கள் என இரு பிரிவினரைக் கொண்டவை. மக்களே இங்கு பார்வை யாளர்கள்,

பூசாரியும், தெய்வம் ஏறி ஆடு வோரும் இங்கு சடங்கை நடத்துவார்கள்.

கோயிலும் கோயிலின் வெளியேயுள்ள கோயில் வெளியுமே சடங்கு நடைபெறும் அரங்கமாகும். உடுக்கு, தவில், சிலம்பு என்ற இசைக் கருவிகள் பின்னணி எழுப்பக் கோயில் வெளி என்ற அரங்கில் நாடகத் தன்மை நிறைந்த இச்சடங்கு நடைபெறுகிறது. மக்கள் சில நேரங்களில் பார்வையாளராகவும், சில நேரங்களிற் பங்காளராகவும் மாறி விடுகின்றனர்.

வந்து வெளிப்படும் தெய்வங்களைக் காவியம், தாலாட்டுப் பாடி வணங்கினாலும் இறுதி நாளன்று அத்தெய்வங்கள் மனம் மகிழ ஒரு பெரும் காட்சி ஒன்றினைப் பூசாரியும் தெய்வக்காரரும், மக்களும் சேர்ந்து நிகழ்த்துவர். இப்பெரும் காட்சி ஒன்றில் பலி கொடுத்தலாய் இருக்கும் அல்லது தீய்ப்பாய்தலாயிருக்கும் அல்லது குளிர்த்தியாயிருக்கும் அல்லது பொங்கலிடுதலாயிருக்கும் அல்லது பள்ளயம் கொடுத்தலாயிருக்கும். இவைகள் யாவும் நாடக பாணியிலமைந்தவை.

ஆனால் சமயச்சார்பு நீங்கப் பெறாமையினால் இவை நாடகம் எனக் கணிக்கப்படுவதில்லை. இவற்றை நாடக அமிசம் நிரம்பிய சமயச் சடங்குகளெனக் கொள்ளலாம்.

(தொடரும்)

அரங்கம் செய்திகள்
விளம்பரங்களுக்கு
071 399 909 1
arangamnews@gmail.com

# பேஸ்புக் காதலில் சீரழியும் இளம் பெண்கள்




இன்று பெரும்பாலானவர்களின் வாழ்க்கையில் அதிகம் ஆதிக்கம் செலுத்துவது சமூகவலைத்தளங்களே.

இளம் வயதிலேயே அதுவும் பாடசாலை செல்லும் வயதிலேயே Android கைதொலைபேசி பாவனை இதற்கு முக்கியமான காரணம்.

காலையில் எழுந்தவுடன் முதல் வேலை பேஸ்புக் பார்ப்பது அதில் நேரத்தை செலவழிப்பது.

இன்று பல தற்கொலைகள் நடக்கின்றன இந்த பேஸ்புக் காதலால். நமது மட்டக்களப்பு நகரிலும் சில இளம் பெண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். முகப்புத்தகத்திலேயே பல சமூக விழிப்புணர்வாளர்கள் இது பற்றி விழிப்புணர்வு பதிவுகளை இடுகிறார்கள். ஆனாலும் இது போன்ற சம்பவங்கள் நடந்த வண்ணமே இருக்கின்றன. நம் சமூகத்து பெண்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

முக்கியமாக பெண் பிள்ளைகளின் பெற்றோர்கள் உங்கள் பிள்ளை கைதொலைபேசியை எதற்காக பாவிக்கிறாள் என்பதை அவதானிக்க வேண்டும்.

பிள்ளையின் உயிர் போன பின் காரணம் என்ன? காரணமானவன் யார்? அவள் பேஸ்புக்கில் என்ன இருக்கிறது? என்றெல்லாம் ஆராய்வதில் எந்த வித நன்மையும் இல்லை.

பெரும்பாலும் வயது குறைந்த இளம் வாலிபர்கள் தொடங்கி வயதானவர்கள் வரை எல்லோரும் பேஸ்புக் பாவிக்கிறார்கள். அதில் பல ஆண்கள் முழுமையாக பொய்யான சுயவிபரங்கள், பொய்யான புகைப்படங்களை இடுகின்றனர். இளம் பெண்களை தேடி அவர்களை தமது நண்பர் பட்டியலில் இணைத்து அப்பெண்களை காதலில் விழ வைக்கிறார்கள்.

முதலில் அந்த பெண்களின் முகப்புத்தக பக்கத்தை அலசி ஆராய்ந்து அவள் பற்றிய தகவல்களை சேகரிப்பார்கள் பின் அவளது பதிவுகளுக்கு "லைக்" இடுவார்கள், கருத்துக்கள் தெரிவிப்பார்கள் அவளுடைய செயல்களை தான் மிகவும் விரும்புவதாகவும் மதிப்பதாகவும் அவளை நம்ப வைப்பார்கள். அதன் பின் மெதுவாக உரையாடலை ஆரம்பிப்பார்கள். நான் மற்ற ஆண்களை போல் அல்ல என்று கூறி கவிதைகளும் காதல் வசனங்களும் பேசுவார்கள். மூன்று வேளையும் மறக்காமல் மெசேஜ் அனுப்புவார்கள். நீ மட்டும் தான் எனக்கு முக்கியம் உன்னை விட எனக்கு வேறெதுவும் தேவையில்லை என்பார்கள்.

ஒரே காதல் மொழியை பல பெண்களுக்கு அனுப்புவார்கள்.

அந்த பெண்களும் அதை எல்லாம் நம்பி ஆழமான காதலும் நம்பிக்கையும் வைப்பார்கள். பிறகு ஒரு நாள் நேரில் சந்திப்போம் என்பான் அந்த வாலிபன். அங்கு அவள் சென்று பார்த்தால் அவள் காதலித்த வாலிபனுக்கு சற்றும் பொருந்தாத ஒருவன் வந்து நிற்பான். உடனே அந்த பெண் மனமுடைந்து வாழ்வை முடித்து கொள்ள துணிவாள்.

ஒரு வேளை அவன் அவள் எதிர்பார்த்தவனாகவே இருந்தாலும் அதிலும் ஒரு பிரச்சினை நடக்கும். அது என்னவென்றால் சந்தித்த உடன் 'வா தனிமையில் பேசுவோம்' என்பான். அவள் தயங்குவாள். அவன் என் மீது நம்பிக்கை இல்லையா என்பான் . உடனே அவள் சம்மதிப்பாள். அங்கு அவனின் உடல் தேவைகள் தீரும் அவள் அனைத்தையும் அந்தக் கயவனிடம் இழந்து நிற்பாள். அவள் பல கனவுகளோடு வீடு வந்து பேஸ்புக்கை பார்த்தால் அங்கு அவள் காதலனின் எந்த தகவலும் இருக்காது. அப்படி ஒருவன் இருந்ததற்கான தடயமே இருக்காது.

## சகி

இனி என்ன காதலும் போய் மானமும் போய் தற்கொலை தான் முடிவு.

இப்படியான கயவர்கள் காதல் என்ற பெயரில் பல பெண்களின் வாழ்வை சீரழிக்கிறார்கள். இப்படியான பிரச்சினைகள் ஒருபுறம் என்றால் இதையும் தாண்டிய முக்கியமான ஒரு பிரச்சனை வீடியோவில் அந்தரங்கங்களை காட்டுவது.

ஒரு பெண் காதலில் விழுந்தவுடன் அடுத்து அந்த ஆண் கேட்பது உன்னை பார்க்க வேண்டும் என்று. வீடியோவில் பேசலாம் என்பான் அவன். அவள் முடியாது வீட்டில் எல்லோரும் இருக்கிறார்கள் என்பாள்.

யாரும் இல்லாத நேரம் பேசலாம் என்று கெஞ்சுவான் குழைவான் அந்த ஆண். முதலில் முகம் பார்த்து பேசுவார்கள். நீ என்ன உடை அணிந்துள்ளாய் என்று கேட்பான் அவன். அவள் வீடியோவில் உடையுடன் சேர்த்து தன் உடல் அழகையும் காட்டுவாள். அவள் அந்தரங்க வீடியோவை அவன் தன் தொலைபேசியில் சேமித்து வைப்பான்.

இந்த காதல் விளையாட்டு படுக்கையறை தொடங்கி குளியலறை வரையும் வீடியோவில் நடந்தேறும்.
சரி எல்லாம் முடிந்தது என்று காதலனில் உள்ள நம்பிக்கையில் அவள் நிம்தியாக இருப்பாள். ஆனால் அவன் அந்த வீடியோவை தன் நண்பர்களுக்கும் காட்டுவான். அவர்களும் அந்த பெண்ணை முகப்புத்தகத்தில் அழைப்பார்கள். தமது ஆசைக்கு இணங்க சொல்லி வற்புறுத்துவார்கள். அவள் மறுத்தால் அவளது அந்தரங்க வீடியோவை அவளிடம் காட்டி மிரட்டுவார்கள். அப்போது தான் அந்த பெண் உணர்வாள் தான் ஏமாந்து போனதை.

அதன் பின் அவமானத்தோடு வாழ முடியாமல் தூக்கில் தொங்கி விடுவாள் அவள்.

இது தான் இன்றைய யதார்த்தம் பெண்களே. பேஸ்புக்கில் தெரியாத ஆண்களை உங்கள் நண்பராக சேர்க்காதீர்கள். அப்படி யாரும் இருந்தாலும் அவர்களுடன் பேசுவதற்கு முன் யோசியுங்கள்.

விலைமதிப்பற்ற உங்கள் மானத்தை இந்த அற்ப சுகத்திற்காக அலையும் ஆண்களிடம் ஏன் அடகு வைக்கிறீர்கள். வீணாக உங்கள் உயிரை ஏன் மாய்த்து கொள்கிறீர்கள்.

முகப்புத்தகத்தில் செய்யக்கூடிய நல்ல விசயங்கள் பல இருக்கின்றன. பல பெண்கள் முகப்புத்தகத்தில் தங்கள் புகைப்படங்கள் மற்றும் சொந்த அனுபவங்கள் போன்றவற்றை பதிவிடுகிறார்கள்தான் நான் அதை மறுக்கவில்லை. ஆனால் அவர்கள் அதில் வரும் பிரச்சினைகளையும் எதிர்ப்புகளையும் எதிர்கொள்ள கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களது தொழில் குடும்ப பின்னணி பொருளாதாரம் என பல காரணங்கள் உண்டு. அது தான் உண்மை.

இன்னொருவர் செய்கிறார் என்று நீங்களும் அதை செய்ய முயற்சிக்காதீர்கள்.
அவர்கள் நிலை வேறு உங்கள் நிலை வேறு.

தயவு செய்து புகைப்படங்கள் பதிவிடுவது, காதலில் விழுவது இது போன்ற செயல்களை செய்யும் முன் உங்கள் குடும்பத்தை பற்றி சிந்தித்து பாருங்கள். எல்லாவற்றுக்கும் பாதுகாப்பு உணர்வு அவசியம்.

பெண்கள் நீங்கள் இந்த சமூகத்தில் சாதிக்க வேண்டியவை நிறைய இருக்கின்றன.

ஆகவே நீங்கள் இது போன்ற வீண் பிரச்சினைகளில் ஈடுபடாமல் முகப்புத்தகத்தை நல்ல விதமாக பயன்படுத்துங்கள்.


பிரச்சினை என்று வரும்போது பாதுகாப்புக்கு உரிய நிறுவனங்களை அணுக தயங்காதீர்கள். அவர்கள் உங்களுக்கு உதவ முடியும். மிகவும் நம்பிக்கையான குடும்ப உறவின் உதவியை நாடுங்கள். அச்சத்தில் பிரச்சினையை மறைக்க முயற்சிக்க வேண்டாம்.

உங்களை நீங்கள்தான் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

## காதல் இலக்கணம் தொலைகிறதே!

பேஸ்புக்கில் முதலில்
பிளீஸ்(Please) பண்ணுதல்
பின்னர் பேஸ்(face) பார்த்தல்
அப்புறம் போஸ்(force) பண்ணுதல்
இறுதியில் அபேஸ் ஆகுதல்
மாஸ்க்(mask) போட்டவர்களை
மங்கையர்களே இனங்காணுங்கள்
காதல் இலக்கணத்தைக்
கவனவீனத்தால் தொலைக்காதீர்கள்!

- யூனா



விம்பம் – லண்டன் நடாத்தும் ஓவியப் பரிசுப் போட்டியும் கண்காட்சியும்

இலங்கைத் தமிழர்களின் ஓவியக்கலை மரபில் வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தியவரும்
நவீன ஓவியக்கலையின் முன்னோடியுமான

ஓவியர் அ. மாற்கு ஞாபகார்த்த

ஓவியப் பரிசுப் போட்டியும் கண்காட்சியும்

போட்டி நிபந்தனைகள்:

1. இலங்கையில் வசிக்கும் 6 -15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான போட்டி.
2. 21.0 cm X 29.7 cm அல்லது 29.7 cm X 42.0 cm அளவிலான காகிதம் அல்லது அட்டையில் எந்தவகையான ஊடகங்களையும் பாவித்து வரையலாம்.
3. A. எங்கள் வாழ்வு (Our Life), அல்லது B. எனது கனவு (My Dream) ஆகிய பொருள்பட ஓவியங்கள் வரையப்படவேண்டும்.
4. ஒருவர் ஒன்று அல்லது இரண்டு படைப்புகளையும் அனுப்பிவைக்கலாம்.
5. ஓவியத்தின் பின்புறத்தில் படைப்பாளியின் ஒளிப்படம் ஒட்டப்பட்டு, பாடசாலை அதிபர் அல்லது கிராம சேவகரால் படைப்பாளியின் பெயர், வயது ஆகியன உறுதிப்படுத்தப்பட்டு கையொப்பமிட்டிருக்க வேண்டும்.
6. விண்ணப்பங்கள் 30. 04. 2019 திகதிக்கு முன்பாக கீழ்க்காணும் ஏதாவதொரு முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் அல்லது கையளிக்கப்படவேண்டும்.
7. அனுப்பப்படும் தபால் உறைகளின் மேல் இடது மூலையில் "VIMBAM Art Competition" என்று குறிப்பிட மறக்கவேண்டாம்.
8. நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.

வெற்றிபெறும் போட்டியாளருக்கு அவரவர் திறமைகளுக்கேற்ப
Rs. 2,00,000
ரூ.20,000, ரூ.15,000, ரூ.10,000, ரூ.5,000 என
18 பரிசில்கள் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம்: Noolaham Foundation, 185, Aadiyapatham Road, Kokkuvil, Jaffna - Tel:0773 747 828
மட்டக்களப்பு: P. Seevagan, Arangam Office, 227, Bar Road, Batticaloa - Tel: 0713 999 091
கிளிநொச்சி: S. Karunakaran, 754, Kanagarasa Thirunagar North, Kilinochchi - Tel: 0770 871 681
வத்தளை: Pramila Pradeepan, 142/17, Don Bosco Mawatha, Palliyawatha, Wattala - Tel: 0771 320 760
பதுளை: K. Thirulogashankar, Principal, Bd/Saraswathy National College, Mahiyangana Road, Badulla - Tel: 0716 997 644
மாத்தறை: Chandani Samarawickrama, Sipsara Education Center, 33, Issadeen Town, Matara - Tel: 0715 784 673

பரிசுபெற்ற ஓவியங்கள், செப்ரெம்பர் 2019இல் இலங்கையில் நடைபெறவிருக்கும் ஓவியக் கண்காட்சிகளில் இடம்பெறும்

VIMBAM: an organization for the promotion of art, literature, film and culture

## பொதுக்கலந்துரையாடல்

**Public Talk**

## புற்றுநோய்

***உங்கள் அபாயநிலையை அறிதல் !***

## Cancer

***Knowing your risk!***

அறிவிக்கிறார்,

**வைத்திய கலாநிதி. சி. அகிலன்**

*MBBS, Dip. ( Histopath.), MD (Histopathology)*

*Consultant Histopathologist,*

*Teaching Hospital Batticaloa.*

நேரம்: **01/02/2019, வெள்ளிக்கிழமை, பி.ப 6 மணி**

இடம்: **பொது நூலக கேட்போர் கூடம், மட்டக்களப்பு**

## அனைவரும் வருக

**Organized by:**

SCIENCE NAVIGATORS Develop Society Via Science http://www.sciencenavigators.org


# சிறை அதிகாரி கைது



ஹெரோயின் 20 கிராமை எடுத்துக் கொண்டு வெலிக்கட சிறைச்சாலைக்குள் பிரவேசிக்க முயற்சித்த சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் சிறைச்சாலை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சிறைச்சாலை உத்தியோகத்தர் மீது சந்தேகம் கொண்டு சிறைச்சாலை அதிகாரிகள் பிரதான நுழைவாயிலில் வைத்து சோதனை செய்த போது இந்த ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட குறித்த உத்தியோகத்தர் மேலதிக விசாரணைகளுக்காக பொரள்ள பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அவர் கைது செய்யப்பட்ட பின்னர் அவருடைய உபகரணங்களை வைத்திருந்த பெட்டகத்தை சோதனை செய்த போது 85,000 ரூபா பணமும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ள

# காத்திருப்பின் வலிமை



பறவை போட்ட
பழத்தின் எச்சம்
எஞ்சியிருக்கின்றது
ஒரு விதை

தரிசு நிலம்
தண்ணீரில்லை
உஷ்ணமும் அதிகம்

விதையினுள்ளே
மிச்சமாயிருக்கின்றது
ஓர் உயிர்
காத்திருக்கின்றது
பருவகாலத்திற்காய்

பருவம் வந்தது
காலம் இல்லை
காலம் வந்தது
பருவம் இல்லை

காத்திருப்பின்
வலிமை நன்றாகவே
வாய்த்திருக்கின்றது
விதைக்கு

காலத்தால் கணிக்கப்படுவதல்ல
காத்திருப்பின் வலிமை

தூரத்தால்
நிச்சயிக்கப்படுவதுமில்லை
காத்திருப்பின் வலிமை

துயரங்களைத் தருவதல்ல
துரத்துவதே காத்திருப்பின்
வலிமை

- சிவச்சந்திரன் சிவஞானம்




தொடர்ச்சி...

## குப்பையகற்றலில் பொதுமக்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும்



நமக்கு கிடைப்பதுடன் நமது சுற்றாடலும் பேணப்படும்.

II) ஒவ்வொரு குடியிருப்பாளரும் தமது இல்லங்களில் இருந்து வரும் குப்பை கூளங்களை தரம்பிரித்துச் சேகரித்து அவற்றை உரிய முறையில் வழங்குவதனை தமது வாழ்க்கை முறையாக மாற்ற வேண்டும்.

III) நமது பிரதேசம், நமது நிலம், நமது மக்கள் என்ற அடிப்படை அறிவு கூட இல்லாத ஒரு சில விஷமிகள் தமது குப்பைகளை வீதிகளில் வீசுகின்றார்கள். குறிப்பாக கோழிக் கழிவுகள், சமையலறைக் கழிவுகள், ஐஸ்கிரீம் குவளைகள் உட்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளை வீதிகளில் திடீர் திடீரென பொட்டலம் பொட்டலமாக வீசிவிட்டு செல்கின்றனர். தன்னிடத்தில் இருக்கிற குப்பையை கொண்டு போய் இன்னொரு இடத்தில் வீசுவதால் தனது பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று நினைக்கின்ற தனிநபர்களை நாம் அடையாளங்காண வேண்டும்.

IV) மட்டக்களப்பு வாவியின் சமநிலை மாறாத வகையில் பராமரிக்க வேண்டும். இதற்கு மக்கள்தான் அதிகம் பொறுப்புடையவர்கள். நாம் ஒவ்வொருவரும் இந்த வாவி நீரில் ஏதாவது ஒரு பொருளை வீசுகிறபோது சுயதுரோகியாக மாறுகிறோம். தூய்மையான இயற்கை வளமான இந்த வாவியை நீடித்து நிலைத்திருக்கும் வகையில் பராமரிக்க வில்லையானால், எதிர்காலத்தில் நோயும் துன்பங்களும் நம்மை சூழ்ந்து கொண்டே இருக்கும். அதன் அழகு அழிந்து போகும். இதனை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

V) பிளாஸ்டிக் பொருட்களினால் டெங்கு முதலான தொற்று நோய்களும் அதிகளவான புற்றுநோயும் ஏற்படுகின்றது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். எனவே பிளாஸ்டிக் பாவனையை நாம் ஒவ்வொருவரும் கூடுமானவரையில் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

திண்மக்கழிவுகளை சக்திவளமாக மாற்றும் தொழில்நுட்பம் வரும்வரை, நாம் நாமாக மாறுகிறபோது நமது நிலம், நமது சூழல், நமது வாழ்க்கை என்பன ஆரோக்கியமானதாகவும் அழகானதாகவும் அமையும். இதனை நாம் அனைவரும் பொறுப்புடன் புரிந்துகொண்டு தமது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்த முயல்வோம்.

தொடர்ச்சி...

## ஒன்பது மாகாணசபைகளுக்குமான தேர்தல் ஒரேநாளில்-- பிரதமர் கட்சித் தலைவர்களைச் சந்திக்கிறார்

புதிய தேர்தல் முறைப்படி உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடத்தப்பட்டன. எனினும் புதிய தேர்தல் முறைப்படி மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டுமானால் எல்லை நிர்ணய சபையின் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்.

ஆனால் அறிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி தாமதப்படுத்துவதாக மகிந்த ராஜபக்சவை மையப்படுத்தி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமன கட்சியின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறாயினும் பழைய முறைப்படி தேர்தல்களை நடத்துவது குறித்து ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மகிந்த ராஜபக்சவை மையப்படுத்திய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிகள் கலந்துரையாடி இணக்கத்துக்கு வருவார்கள் என கொழும்பு அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

எதிர்வரும் மே மாத இறுதியில் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலக அதிகாரியொரவர் கூறியுள்ளார்.

தொடர்ச்சி...

## காட்டு யானைகளின் வரவேற்புடன் (அட்டகாசத்துடன்) ஆரம்பித்த 40வது வட்டை பாடசாலையின் விளையாட்டுப் போட்டி.



ஓட்டங்கள், உடற்பயிற்சி கண்காட்சி, செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன.
நிகழ்வில் மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்தார்.

## பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இலஞ்சம் பெற்ற வேளை கைது'

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை பொலஸ் நிலைய பொறுப்பதிகாரி சிசிர பண்டார என்பவர் புதன்கிழமை( 30) மாலை லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

முனைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த மணல் ஏற்றும் லொறி ஒன்றின் சாரதியிடமிருந்து 25ஆயிரம் ரூபா லஞ்சம் பெற்ற வேளை கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த இலஞ்ச ஊழல் பிரிவினரால் கைது செய்யப்பட்டதாக கூறப்பட்டது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மணல் ஏற்றிக் கொண்டிருந்த லொறி ஒன்றை கைப்பற்றச் சென்ற வேளை சாரதி மற்றும் உதவியாளர்கள் தப்பித்துள்ளனர். அது தொர்பாக இன்றைய தினம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றவேளை அவர்களிடமிருந்து பணம் லஞ்சமாகப் பெறப்பட்ட நிலையில் இக்கைது நடைபெற்றுள்ளதாக கூறப்பட்டது.

தொடரச்சியாக இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவது தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்றைய தினம் இக் கைது நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலமாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மட்டக்களப்பில் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த வருடத்தின் இறுதியில் கல்குடா பொலிஸ் நிலைய பதில் கடமை அதிகாரி கல் குவாரி ஒன்று தொடரபில் லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார்.

அதே நேரம் கிராம சேவையாளர் ஒருவர் காணி விடயம் ஒன்றுக்காக லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் மட்டக்களப்பில் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அதே நேரத்தில் போக்குவரத்துப் பொலிசார் ஒருவர் லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

தொடர்ச்சி...

## வியாழேந்திரன் - கிழக்கு ஆளுநர் சந்திப்பு

கிழக்கு ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் அவர்களை கிழக்கு ஆளுநர் செயலகத்தில் சந்தித்தார்.

பாடசாலை எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக கலந்துரையாடியதோடு அதற்கான தீர்வுத் திட்டம் தொடர்பாகவும் பேசப்பட்டது.

மேலும் அப் பகுதியை சேர்ந்த மூன்று பாடசாலைகளை உடனடியாக தரமுயர்த்துவற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு மாகாண கல்வி பணிப்பாளருக்கு ஆளுநர் பணிப்புரை வழங்கினார்.

மேலும் பின்தங்கிய பாடசாலைகளுக்குரிய சகல உதவிகளை வழங்குவதாக கிழக்கு ஆளுநர் உறுதியளித்தார்.

கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் மன்சூர் அவர்களும் இதில் கலந்து கொண்டார்.

தொடர்ச்சி...


## மீனின் விலையை மீனவர்களே தீர்மானிக்க வேண்டும் - மட்டு - மாவட்ட அரசாங்க அதிபர்.

இருந்தாலும் குளங்களைப் போன்று ஆறுகளில் மீன்குஞ்சுகளை விடுவது சாத்தியமில்லை. இருந்தாலும் எதிர்காலத்தில் மீனவர்களது பிரச்சினைகளைத் தீர்க்கும் கண்டல் தாவரங்களைப் பாதுகாத்தல், அவை வளரக்கூடிய இடங்களில் நடுகை செய்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளமுடியும்.

கடல்சார் தொழில் கற்கைகளை மேற்கொள்ளக்கூடிய சமுத்திரவியல் பல்கலைக்கழகம் மட்டக்களப்பில் உள்ளது. இருந்தாலும் அதனைப் பயன்படுத்துபவர்கள் மிகவும் குறைவு. தற்போதைய தொழில் நுட்ப வளர்ச்சியில் மீனவர்கள் தங்களையும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.
நாம் சரியான முறையில் கடலைப் பயன்படுத்தாததாலேயே இந்தியாவிலிருந்தும், வெளி இடங்களிலிருந்தும் மீன்பிடியாளர்கள் வருகிறார்கள். பல நாட் படகுகளை மீன்பிடியில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலின் போது, 2001ம் ஆண்டு ஜனவரி 15ம் திகதி வெளியான வாவிச் சட்டதிட்டங்களை அமுல்படுத்தல், மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் யாப்பில் திருத்தங்களை மேற்கொள்ளல், அனுமதியற்ற மீன்பிடியில் ஈடுபடுவதனைத் தடுத்து நிறுத்துவதற்கான விழிப்பூட்டல் நடவடிக்கைகளை எடுத்தல், அசுத்தமான நீரை வாவிக்குள் திறந்து விடுதலைத் தடைசெய்தல், வாவிக் கரைகளில் கண்டல் தாவரங்களை நடுதல் உள்ளிட்ட 20 விடயங்கள் ஆராயப்பட்டன.

இக் கலந்துரையாடலில் கடல் தொழில் நீரியல் வள திணைக்கள உதவிப்பணிப்பாளர் சுக்சான் குருஸ், மட்டக்களப்பு மாவட்ட உள்ளுராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பிரகாஸ், மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் ஏ.குலம், செயலாளர் ஆர்.இருதயநாதன் மற்றும் உறுப்பினர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



# புலையவெளி பதுளை வீதி
# தீர்த்த விநாயகர்/வழிப் பிள்ளையார் பிரதிஷ்டை



08-02-2019 வெள்ளிக்கிழமை காலை 09.மணி – காலை 10.30 மணி வரையுள்ள திருதியை திதியும் புரட்டாதி நட்சத்திரமும் கூடிய சுப முகூர்த்த வேளையில் புலையவெளி பதுளை வீதி தீர்த்த விநாயகர் பிரதிஷ்டை செய்ய திருவருள் கைகூடியுள்ளது. எனவே அனைவரும் வருகை தந்து எம் பெருமானின் திருவருளைப் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காலை 08.30 மணிக்கு :-

விநாயகர் வழிபாட்டுடன் அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயத்திலிருந்து தீர்த்த விநாயகப் பெருமானின் சிலையானது பூசை செய்து மக்களின் ஊர்வலத்துடனும், மேளதாளத்தினுடனும் எடுத்துச் செல்லப்பட்டு புலையவெளி பதுளை வீதிக்கு அருகாமையில் எம்பெருமானின் சிலை பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய குரு
திரு . ஜெயக்குமார் சர்மா ஐயா
பிரதிஷ்ட்டை குரு
சிவசிறி . சி.கு லிகிதராஜ குருக்கள்

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

FCC SUPER MALL
4 Wings for Uplift Your life
ஒரே கூரையின் கீழ் வாழ்வின் அத்தியாவசிய பொருட் தேவையை பூர்த்தி செய்ய அன்புடன் வரவேற்கின்றோம்.

உங்களின் வாழ்வை மேம்படுத்த நான்கு இறக்கைகள்...
PHARMACY — TIP TOP HEALTH CARE
SUPER MARKET — CITY CENTRE
BUDGET SHOP — CASH & CARRY, Young Forever
CAFETERIA — FCC Cafe
இல.16, மத்திய வீதி, மட்டக்களப்பு. TP: 0652222722, Hotline: 0772072722

FCC வழங்கும் இவ்வார சிந்தனை!
நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும், எப்போதுமே மண்டியிடுவது இல்லை.
--அப்துல் கலாம்--







Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa